# விடுதலைப்புலிகள்

குரல்: 78 | கார்த்திகை - 1997 | அன்பளிப்பு: 5/-


உள்ளே


- தலைவரின் அறிக்கை சொல்லும் உண்
- வன்னிப்போர்க்கள நிலைமை
- செய்தி ஆய்வுகள்
- 'தேசத்தின் புயல்கள்'
- உலைக்களம்
- அமெரிக்காவின் செயலுக்கு ஒரு விளக்கம்


## தாயகம், தேசியம், தன்னாட்சி:

# அரசியற் தீர்வுத் திட்டத்திற்கு புலிகள் விதிக்கும் அடிப்படைகள்

## துயிலும் இல்லங்களின் அழிப்பிற்கு தலைவர் பிரபாகரன் கடும் கண்டனம்



## தலைவரின் மாவீரர் நாள் அறிக்கை

**மாவீரர்நாளை முன்னிட்டு தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரை இங்கே முழுமையாகத் தரப் பட்டுள்ளது.**

எனது அன்பிற்கும் மதிப்பிற்கு முரிய தமிழீழ மக்களே.

இன்று மாவீரர் நாள்.

எமது இனத்தின் விடுதலைக் காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்து, எமது இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் எம்முயிர்த் தியாகி களை நாம் நினைவுகூர்ந்து கௌரவிக்கும் புனித நாள்.

மக்களின் விடுதலையென்ற ஒரு மகத்தான இலட்சியத்தை வரித்து, அந்த இலட்சியத்திற்காக வாழ்ந்து, அந்த இலட்சியத்தை அடைய உறுதிதளராது போராடி, அந்த இலட்சியப் போரில் தமது உயிரையே அர்ப்பணித்த மாவீரர்கள் மகோன்னதமான மனிதப்பிறவிகள்.

மாவீரர்களைப் புனிதர்களாகவே நான் கௌரவிக்கின்றேன். தாய் நாட்டின் விடுதலையென்ற பொதுமையான பற்றுணர்வால் ஈர்க்கப் படும் அவர்கள், தமது தனிமையான பற்றுக்களையும் பாசவுறவுகளையும் துறந்துவிடுகிறார்கள். சுயவாழ்வின் சுகபோகங்களைக் கைவிட்டு பொதுவாழ்வின் அதியுயர் விழுமியத்தைத் தழுவிக்கொள்கிறார்கள். அந்தப் பொதுவான இலட்சியத்திற்காகத் தமது சொந்த வாழ்வையும் அர்ப்பணிக்கத் துணிகிறார்கள். இதனை ஒரு புனிதமானதுறவறமாகவே நான் கருதுகிறேன். இந்தப் புனிதத் துறவறத்திற்கு இலக்கணமாக விளங்கும் மாவீரர்களை நாம் புனிதர்களாகவே பூசிக்க வேண்டும்.

தன்னலமற்ற, மக்களைப் பயனை எதிர்பாராத விடுதலைத் தொண்டில், தம்மையே அழித்துக் கொள்ளும் அதியுன்னத தியாகிகள் என்பதால், மாவீரர்களுக்கு எமது விடுதலை இயக்கம் பெரும் மதிப்பையும் கௌரவத்தையும் வழங்கி வருகிறது. மாவீரர்களை எமது இனவிடுதலைப் போரின் வரலாற்று நாயகர்களாக, தேசிய வீரர்களாக நாம் போற்றுகிறோம். அவர்களது நினைவுகள் காலத்தால் கரைந்து போகாது, என்றும் எமது நெஞ்சங்களில் நிலைத்திருக்க வேண்டுமென்பதற்காக நாம் அவர்களுக்கு நினைவு விழாக்கள் எடுக்கிறோம். நினைவுச் சின்னங்கள் நிறுவிக் கௌரவிக்கிறோம். வீர வணக்கச் சடங்குகளுடன் மாவீரர்களது வித்துடல்களை விதைப்பதும், நினைவுக் கல் நாட்டுவதும், அவர்களது கல்லறைகளைப் புனிதச் சின்னங்களாகப் பூசிப்பதும், அவர்களது துயிலும் இல்லங்களைப் புனிதத் தலங்களாக வழிபடுவதும், எமது மக்களால் விரும்பப்படும் வழக்காகிவிட்டது.

மாவீரர்களின் நினைவாக, ஒரு வீர வழிபாட்டு மரபு, எமது மண்ணில் உருவாகியிருக்கிறதென்பதை நான் பெருமிதத்துடன் சொல்வேன்.

மாவீரர்களை வணக்கத்திற்குரியவர்களாகக் கௌரவிக்கும் எமது வீர மரபு, தமிழரின் எதிரியான சிங்கள இனவாத அரசுக்கு எரிச்சலையூட்டியிருக்கிறது. சிங்கள தேசம் யாரைப் பயங்கரவாதிகளாக இழிவுபடுத்தி வந்ததோ அவர்களைத் தமிழர் தேசம் புனிதர்களாகப் பூசிப்பதை பேரினவாதிகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அத்தோடு மாவீரரின் வீர வழிபாட்டு மரபானது தமிழினத்தின் விடுதலை எழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்துவருவதாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் கருதினர். இத்தகைய இனத் துவேசப் பகையுணர்வால் உந்தப்பட்ட சிங்களப் பேரினவாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்கமுடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது.

யாழ்ப்பாணக் குடாநாடு எதிரிப் படைகளின் பிடியில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியால் குலைக்கப்பட்டது: அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன.

புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாக, தமிழர்களாற் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களைச் சிதைத்தழித்த இச் செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெயலென்றே நான் கூறுவேன். ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனமென இச் செயலை சிறுமைப்படுத்திவிட முடியாது. இது மிகவும் பாரதூரமான பயங்கரவாதச் செயல். தமிழினத்தின் தேசிய ஆன்மாவில் நீங்காத கறையை ஏற்படுத்திய இந்த அவச் செயலுக்குச் சிங்களப் பேரினவாத அரசே பொறுப்பேற்க வேண்டும்.

இந்தப் பண்பற்ற செயல் ஒரு உண்மையைப் பகர்கிறது. அதாவது, சிங்கள தேசத்தை ஆண்டு வரும் இனவாத ஆட்சியாளர்கள் தமிழர்களின் உணர்வுகளுக்கு என்றுமே மதிப்பளிக்கப்போவதில்லை அத்துடன் தமிழர்களின் தேசிய அபிலாசைகளைப் புரிந்து, அவர்களுக்கு நீதியும் வழங்கப்போவதில்லை. இறந்து போனோரின் அமைதியையே கெடுப்பவர்கள் இறவாதோருக்கு நிம்மதியைக் கொடுப்பார்களென நான் கருதவில்லை.

எனது அன்பார்ந்த மக்களே.

இலங்கைத் தீவின் ஆட்சியதிகாரம் சிங்களப் பெரும்பான்மை மக்களிடம் ஒப்படைக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. இந்த அரை நூற்றாண்டு காலமாக, மாறி, மாறி அதிகார பீடத்தில் ஏறிய சிங்கள இனவாதக் கட்சிகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Liberation Tigers Of TAMIL EELAM

## புலிகளின் குரல்

# தலைவரின் அறிக்கை சொல்லும் உண்மைகள்

தலைவர் பிரபாகரன் விடுத்துள்ள மாவீரர்நாள் செய்தி பல்வேறு விடயங்களை எடுத்தியம்புகின்றது. நிரந்தர சமாதானத்திற்கு அடிப்படையான அரசியல் விடயங்கள் பற்றியும் - சமாதான வழிமுறைகள் தொடர்பாக புலிகள் இயக்கம் மீது சிங்கள அரசு சுமத்த விரும்பும் அபாண்டமான குற்றச்சாட்டுகள் தொடர்பான உண்மைநிலையையும், அவர் தெளிவுபடுத்தியுள்ளார். அதேவேளை சிங்கள அரசின் விட்டுக்கொடாப்போக்கையும் சுட்டிக்காட்டி - உரிமைபெறுவதற்காக நாம் உறுதிதளராது போராடவேண்டிய அவசியத்தையும், தலைவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கடந்த 50 வருடகாலமாக மாறி-மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்மக்களின் உரிமைகளை மறுத்து-இனரீதியாக அவர்களை ஒழித்துக்கட்டுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கின்றனர் என்ற வரலாற்று உண்மையை, தலைவர் நினைவூட்டியுள்ளார். அதேவேளை, சமாதான முகமூடி அணிந்துள்ள சந்திரிகா அரசாங்கத்தின் பேரினவாதக்குணாம்சத்தை தோலுரித்துக்காட்டி அம்பலப்படுத்தியுள்ளார். தீவிர பேரினவாதியான சந்திரிகா அம்மையாரை, உலகம் சமாதான தேவதை போல தவறாக இனங்கண்டுள்ளது என்று எடுத்துக் கூறிய தலைவர் அவர்கள், சந்திரிகாவின் மூன்றாண்டு ஆட்சியில் முழுத் தமிழினமுமே துன்பப்பளுவைச் சுமந்துள்ளது என்ற யதார்த்தத்தையும், தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேசமயம், சந்திரிகா அரசாங்கத்தின் அரசியல்பொதியும் இராணுவ படையெடுப்புகளும் ஒரு நோக்கத்தைக் கொண்ட இரண்டு அணுகுமுறைகள் என்ற உண்மையை, தலைவர் இனங்காட்டியுள்ளார்.

தமிழர்நிலங்களை ஆக்கிரமித்து - அவர்களின் தாயக பூமியை சிங்களத்தின் ஆதிக்கப்பிடிக்குள் கொண்டுவந்து - தமிழரின் தேசிய தனித்துவங்களை அழிப்பதே போர்த்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதுபோல, அதிகாரப் பரவலாக்கலுக்கான அலகுகள் என்ற போர்வையில் தமிழர் தாயகத்தைப் பிரித்து - கூறுகளாக்கி, ஒற்றையாட்சி அரசியல் அமைப்புமுறை என்ற கோதாவில் தமிழரின் ஆட்சி அதிகாரங்களைப் பறித்து, அவர்களின் தேசிய அபிலாசைகளைச் சிதைப்பதே தீர்வுப் பொதியின் முக்கிய இலக்கு.

அதாவது, தமிழ் மக்களின் தேசிய தனித்துவங்களை அழித்து - அவர்களின் தேசிய இன அபிலாசைகளைக் குழிதோண்டிப்புதைக்கும் கைங்கரியத்தையே படையெடுப்புக்களும் செய்யவிரும்புகின்றன - தீர்வுப் பொதியும் சாதிக்க விரும்புகின்றது. ஆகவே, தலைவர் கூறியுள்ளது போல "சந்திரிகாவின் அரசியல் பொதியும் - இராணுவத்திட்டங்களும் ஒரு நாணயத்தின் இருமுகங்களே ஆகும்.

அத்துடன், புலிகள் இயக்கத்தை சமாதானத்தின் விரோதிகள் என்று உலகிற்கு காட்டமுயலும், சந்திரிகா அரசாங்கத்தின் பிரச்சாரத்தில் உண்மை இல்லை என்று, தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

1985 ஆம் ஆண்டு திம்புவில் நடந்த முதலாவது சமாதானப் பேச்சிலிருந்து, 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த கடைசிப் பேச்சுவார்த்தைவரை தமிழரின் இனப் பிரச்சனையைப் பேசித்தீர்க்க புலிகள் இயக்கம் முயன்றுள்ளதை, அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், சிங்கள அரசாங்கங்களின் விட்டுக்கொடாப் போக்குகள் - கபடத்தனங்கள் காரணமாக பேச்சுக்கள் வெற்றிபெறவில்லை. இந்தப் பத்தாண்டு காலத்திற்குள் நிகழ்ந்த பேச்சுவார்த்தை முயற்சிகள் வெற்றிகரமாக முடிவுறாமல - இடைநடுவில் முறிந்து போனதற்கு சிங்கள அரசாங்கங்களே பொறுப்பேற்கவேண்டும் என்று, தலைவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழரின் இனப்பிரச்சனை நியாயமான முறையில் நிரந்தரமாகத் தீர்த்து வைக்கப்படவேண்டும் என்றே புலிகள் விரும்புகின்றனர். அதற்காக தமிழரின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை சிங்கள அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று, தலைவர் வலியுறுத்துகின்றார். தமிழர் தாயகம், தமிழர்தேசியம், தமிழரின் தன்னாட்சி உரிமை என்பவையே அந்த அடிப்படை விடயங்களாகும் என்று, தலைவர் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.

ஆனால், தமிழ் இனத்தின் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டு - அதன் தேசிய இன அந்தஸ்தை, பேரினவாத அரசு அங்கீகரிக்கும் என்று எதிர்பார்க்க இயலாது. ஆகவே, விடுதலை என்ற எமது இலட்சியத்தை இரத்தம் சிந்திப் போராடிப் பெறுவதைத் தவிர வேறுவழியில்லை என்று, யதார்த்த சூழலை எடுத்துக்கூறி, தலைவர் விளக்கியுளளார்.

இந்த உன்னத இலட்சியத்திற்காக இதுவரை களமாடி வீழ்ந்த மாவீரர்களுக்கு, தலைவர் புகழாரம் சூட்டி வீர வணக்கம் செலுத்தியுளளார்.

"மாவீரர்களை தேசத்தின் புனிதர்களாகப் போற்றி வணங்கும் ஒரு வீரவழிபாட்டு மரபு எமது மண்ணில் உருவாகி விட்டது" என்ற பிரகடனம், தலைவர் பிரபாகரனின் இந்த வருட மாவீரர் நாள் செய்தியில் அடங்கியுள்ளது.

நடுகற்களைத் தாங்கி நிற்கும் மாவீரர் துயிலும் இல்லங்கள், எமது மக்களின் உணர்வுப்புலத்தினுள் ஆழ இடம்பிடித்து விட்ட உண்மையை, அவர் உணர்ச்சி பொங்க எடுத்து விளக்கியுள்ளார்.

தேசப்பற்றால் உந்தப்பட்டு விடுதலைப் போராளியாக மாறி - எதிரிப் படையுடன் வீரமாகப் போர்புரிந்து - மீண்டும் பெற முடியாத உயிர்களை ஈகம் செய்த இந்த மண்ணின் மைந்தர்களை, இதய சுத்தியுடன் நினைவு கூர்வதும், அவர்களது கல்லறைகளை புனிதத்தலங்களாக மதிப்பதும், அவர்களுக்கு விழா எடுப்பதும் - இன்று - எமது மக்களது வாழ்வுடன் ஒன்றாகக் கலந்துவிட்ட ஒரு பண்பாட்டு மரபாகி விட்டது.

வீரத்தையும் - ஈகத்தையும் வணங்கிப் போற்றும் இந்தப் புதிய பண்பாட்டை முளையிலேயே கிள்ளியெறிந்துவிடும் நோக்கத்துடன், ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நாட்டில், மாவீரர் துயிலும் இல்லங்களைத் தரைமட்டமாக்கி - மாவீரர் சின்னங்களை இடித்தழித்த சிங்கள அரசின் ஈனச் செயலை, தலைவர் அவர்கள் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

எதிரிப்படையினரின் உயிரற்ற உடலுக்கு மரியாதை செய்வது ஒரு போர்ப் பண்பு, போர்வீரர்களின் கல்லறைகளுக்கு கௌரவம் கொடுப்பது உலகெங்கும் கடைப்பிடிக்கப்படும் ஒரு பொதுமரபு.

இந்தியப்படைகள் எமது மண்ணை விட்டு வெளியேறிய பின்னர், போரில் இறந்த தமது சகாக்களுக்காக அவர்கள் அமைத்துவிட்டுச்சென்ற ஒருசில நினைவுச் சின்னங்களுக்கு எந்தவித ஊறும் விளைவிக்க வேண்டாம் என்று புலிவீரர்களுக்கு, தலைவர் பிரபாகரன் உத்தரவிட்டு, அவற்றிற்கு கௌரவம் கொடுத்த வரலாற்றுச் சம்பவத்தை இங்கே சுட்டிக் காட்டுதல் பொருத்தமாகும்.

ஆனால் சிங்கள அரசு, இந்தப் போர்த் தர்மத்தைக் காலில் போட்டு மிதித்து, தமிழினத்திற்கு எதிரான வெறித்தனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

சிங்களப் பேரினவாதத்தின் இராணுவத் திமிருக்கு எமது மாவீரர் சின்னங்கள் ஒரு சவாலாகத் தென்பட்டிருக்கும். தமிழ் இளம்பரம்பரைக்கு தமிழ்த்தேசிய உணர்வையும் - போர்குணத்தையும் ஊட்டிவரும் இந்தப் புதிய சின்னங்களையும் சிங்களப் பேரினவாதம் தனது எதிரியாகவே கருதி அழித்தொழிக்க விரும்பியிருக்கலாம். ஆயினும், பெருமையும், கீர்த்தியுமமிக்க ஒரு பண்டைய வரலாற்றுச் சின்னம்போல - எமது மக்களின் மன அரங்கில் ஆழப்பதிந்துவிட்ட - இந்த மாவீரர் சின்னங்களையும், அது கொடுக்கும் உணர்வெழுச்சிகளையும் எந்த சக்தியாலும் அழிக்கமுடியாது.

இந்த உணர்வெழுச்சிகள் அணையாத நெருப்பாக எரிந்து எமது தேசவிடுதலை என்ற இலட்சியத்தை அடைவதற்கு வழிசமைத்தே தீரும். O

# நுணுக்குக்காட்டி

(வர்த்தகமைய) குண்டுச்சத்தம் கேட்டதும் தலைமைப்பிக்கு 'குறோளில்' சென்றார்.

காயமடைந்த சகபிக்கு

சநதேசிய - ஒக். 13, 1997

இந்த அரசாங்கம் NATO போன்றதென்று சிலர் கதைக்கின்றனர். அதாவது கதை மட்டும், செயல் இல்லை [No action talk only].

அநுரா பண்டாரநாயக்க

சண்டேரைம்ஸ் - ஒக். 12, 1997

முதலீட்டாளர்கள் இந்த நாட்டிற்கு (சிறிலங்கா) வருவதைத்தடுக்க ஒரு குண்டுபோதும்.

முதலீட்டாளர்

சண்டேரைம்ஸ் - நவ. 9. 1997

தெற்கில் புதிய குடியிருப்புக்களை அமைக்க முடியாது. அங்கே தென்னை, தேயிலை, கோப்பித் தோட்டங்கள்தான் உண்டு. அங்கேயும் தமிழர்கள்தான் வாழ்கின்றனர். அத்துடன், தெற்கில், எல்லா வனங்களும் சரணாலயங்களாகவே உள்ளன. ஆகவே. நாங்கள் (சிங்களவர்) வடக்குகிழக்கில்தான் குடியேறவேண்டும்.

சிங்கள ஆணைக்குழு அறிக்கை

" நாங்கள், அன்ரியாக்கள், மாமாக்கள் சித்தப்பா எல்லாரையும் விட்டுட்டு வந்திட்டோம். அதெண்டாலும் பரவாயில்லை, எல்லாத்திலும் மேலான எங்கட நாட்ட விட்டு, உயிரிலும் மேலான எங்கட தலைவரை விட்டு வந்திட்டோம் எண்டுதான் கவலை"

(தமிழீழத்திலிருந்து, தமிழகத்துக்கு இடம்பெயர்ந்து சென்ற ஒரு மகன், வேறோர் நாட்டில் இருக்கும் தந்தைக்கு எழுதிய கடிதத்திலிருந்து)

காலச்சுவடு

ஒக். — டிச. 1997

இலங்கைத் தீவு முழுவதும் ஒருவருடைய ஆட்சியின் கீழ், மிக அரிதாக ஒன்று - இரண்டு தடவைகள் மட்டுமே இருந்துள்ளது. வரலாற்றின் எல்லாக் காலங்களிலும், இலங்கைத் தீவானது, இனங்களினதும் - பண்பாடுகளினதும் ஒரு கொதி உலையாக குமுறிக்கொண்டே இருக்கிறது.

பேராசிரியர் மகிந்த பலிகவதன

தென்சின மோனிங் போஸ்ற்

ஒக். 8, 1997 O

# வன்னிப் போர்க்கள நிலைமை!

## எதிர்வு கூறல்களா?

## அடிமன ஆசைகளா?



'இதற்குமுன் முடிந்துவிடும்', 'அதற்கு முன் முடிந்துவிடும்' என்று சிங்களத் தளபதிகள் கூறிய பல்வேறு காலக்கெடுக்களையும் தாண்டி 'ஜயசிக்குறுய்' தொடர்கின்றது. 200 ஆவது நாள் நிறைவையும் அது கண்டுவிட்டது. இப்போது, ரத்வத்த அவர்கள் மாசி மாதத்திற்குள் 'வெற்றி உறுதி' நடவடிக்கை முற்றுப்பெற்றுவிடும் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

சிறிலங்காவின் அடுத்த சுதந்திரதினத்தை மனதில் வைத்தே அந்தக்காலக்கெடு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் மாசிமாதம், சிறிலங்கா, தனது 50 ஆவது சுதந்திரதின விழாவை கொண்டாட இருக்கின்றது. அந்தச் சுதந்திரதினப் பொன்விழாப் பூர்த்தியை, மாபெரும் இராணுவ சாதனையுடன் கொண்டாட சந்திரிகா - ரத்வத்த அரசாங்கம் ஆசைப்படுகின்றது. இந்த ஆசையைப் பூர்த்திசெய்ய சிங்களப்படையினர்க்கு இன்னும் இரண்டு மாதங்கள் மட்டுமே அவகாசமுள்ளன.

தமிழர் நிலத்தின் அரசியல் – இராணுவ யதார்த்தத்தை அளந்தறிவதற்கு, சிங்கள ஆட்சியாளர்கள், எப்பொழுதுமே சரியான அளவுகோல்களைப் பயன்படுத்தியதில்லை. இப்போதும் அதுதான் நடக்கின்றது.

ஜயசிக்குறுய் நடவடிக்கை அரைவாசிக் கட்டத்தை அடைய முன்னரே அதற்கு ஆட்பற்றாக்குறை ஏற்படத் தொடங்கிவிட்டது. சிங்களத்தின் இராணுவப் பேச்சாளர் அதை ஒப்புககொண்டுள்ளார். கிழக்கு மாநிலத்தில் இருந்து மேலும் - மேலும் படையினர் ஜயசிக்குறுயிக்காக எடுக்கப்படுகின்றனர். தெற்கில் இருந்தும் துருப்புக்கள் நகர்த்தப்படுகின்றன. குடாநாட்டில் இருந்தும் படையினர் வன்னிப்போர்முனைக்கு அனுப்பப்படுகின்றனர். இவ்விதம் ஜயசிகுறுயின் ஆட்தேவை அளவு கடந்துள்ளது. ஆனால், இந்தப்பிரச்சனையை சிங்களப் படைத் தலைமை கருத்தில் எடுக்காது – புலிகளுக்கு ஏற்பட்டுள்ளதாக அது நம்பும் இராணுவப் பிரச்சனைக்கே முக்கியத்துவம் கொடுத்து – நிலைமையை மதிப்பிட விரும்புகின்றது.

இதேவேளை, ஜயசிக்குறுயிக்கு ஒரே ஒரு குறிக்கோள் மட்டுமே உள்ளதாக, அரசாங்கம் காட்டிக்கொள்கின்றது. அதாவது, வவுனியா – கிளிநொச்சி பாதையைக் கைப்பற்றுவதே அதுவாகும். ஆனால், முழுப்பலத்தையும் ஒன்றுதிரட்டி பாதையைக் கைப்பற்றினாலும் அதைத் தொடர்ந்து பாதுகாக்கவேண்டிய இராணுவப்பணியை படைத்தலைமை சிறியதொரு வேலையாகப் பார்க்கின்றது. ஏனென்றால், பாதையைக் கைப்பற்றி முடிக்கும்போது புலிகளும் அழிந்துவிடுவார்கள் என்று அது நம்புகின்றது.

பாதையைக் கைப்பற்றினால் 'புலிகளின் கதை முடிந்துவிடும்' என்று எந்த இராணுவ அளவுகோலை வைத்து, அவர்கள், அளந்து பார்த்து எதிர்வு கூறுகின்றார்களோ தெரியவில்லை.

தங்கத்தை பலசரக்குக் கடைத் தராசில் வைத்து நிறுப்பதுபோல விடுதலைப் போரை மரபுப் போர்த்தராசில் வைத்து மதிப்பிட அரசு விரும்புகின்றது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர், வியட்நாம் மண்ணில, அமெரிக்கா விட்ட தவறைப்போல– பத்துவருடங்களுக்குமுன், தமிழீழத்தில் இந்தியா இழைத்த தவறைப்போல சிங்கள அரசாங்கமும் மதிப்பீட்டுத் தவறிழைத்து வருகின்றது.

அனைத்து ஆக்கிரமிப்புப் படைகளையும் போல சிங்களப்படைத்தலைமையும் மரபுப்போர் மனநிலையில் இருந்தபடியே சிந்திக்கின்றது. அவர்களைப் பொறுத்தவரை இது தவிர்க்கமுடியாதது. எல்லாம் முடிந்தபின் பலவருடங்கள் கழிந்தபின்பே இவர்களுக்கு மறுசிந்தனை ஏற்படும். ஒரு அரசுப்படை தோல்விகளைத் தொடர்ச்சியாகத் தழுவும்போது அந்த அரசாங்கம் கவிண்டுவிடுவது சாதாரணவழமை. இதுபோல, ஒரு விடுதலைச்சேனை சில பின்னடைவுகளைக் காணும்போது, குறித்த மக்கள் அந்த விடுதலை இயக்கத்தை நிராகரித்து விடுகின்றனர் என்று தவறாகக் கணிப்பிட்டு - தமது ஆசைப்படி எதிர்வு கூறல்களைச் செய்கின்றனர். அதிகளவு நிலங்களை ஆக்கிரமிக்கும்போது – போக்குவரத்துப் பாதைகளைக் கைப்பற்றும் போது - முக்கிய சந்திகளை, பாலங்களைக் கைப்பற்றும்போது ஒரு மரபுப்படை மகிழ்வது அதன் குணாம்சம். சிங்களப்படைகளும் அத்தகைய மனநிலையுடனே இருக்கின்றன. ஒரு விடுதலை இயக்கத்துடனான போரைப் பொறுத்தவகையில் அந்த மரபுவழி மகிழ்ச்சி சிறிது காலமே நிலைக்கும்.

**ஜயசிக்குறுய் நடவடிக்கை மிகவும் மந்தகதியில் நடைபெறுகின்றது என்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால், இதை ஜயசிக்குறுயின் நகர்வுத் தந்திரமாகக் கொள்ளக்கூடாது. உண்மையில் ஜயசிக்குறுயின சமர்த்தந்திரம், வேகமும்- பேராசையும் (*Speedy and Ambitious*) நிறைந்ததாகவே இருக்கின்றது.**

இந்தியப் படையுடன் சண்டைமூண்டால், புலிகளை அழிக்க எவ்வளவு 'காலமெடுக்கும்? என்ற, இந்திய அரசியல் தலைமையின் வினாவுக்கு; ஒரு மாதத்தில்; என்று அதன் இராணுவத்தலைமை உறுதியளித்தது. சண்டைமூண்டது, ஒன்று - ஒன்றரை மாதத்தில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது; ஆனால் புலிகளை அழிக்க முடியவில்லை. புலிப்படையின் தளப்பகுதி யாழ்ப்பாணம் என்று, மரபுப் போர்வழிச் சிந்தனைமுறையில் இந்திய இராணுவத்தலைமை சிந்தித்து, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினால் புலிகளை அழிக்கலாம் என்று தவறாக மதிப்பிட்டு – எதிர்வு கூறலில் தவறிழைத்தது.

ஒப்பறேசன் 'பவான்' என்று அழைக்கப்பட்ட யாழ்ப்பாணச் சமரில் இந்திய இராணுவத்தலைமை இழைத்த மதிப்பீட்டுத்தவறை, அதைத் தொடர்ந்துவந்த வன்னிச்சமரில் திருத்தமுயன்றது.

'செக்மேற்' சமரை இந்தியப்படைகள் திட்டமிட்டே நடாத்தின. களமுனையிலேயே தலைமையகத்தை (நித்திகைக்குளம்) அமைத்தபடி சமரை படைத்தலைமை நெறிப்படுத்தியது. மெதுவாக – அதேவேளை உறுதியாக (*Slow and Steady*) என்ற சமர்த்தந்திரத்தை சண்டைகளில் கடைப்பிடித்தது. சிறு - சிறு ஓய்வுகள் என்ற அடிப்படையில் செக்மேற், சுமார் பத்து மாதங்கள் நடைபெற்றது. முடிவு... உலகின் முதல்தர கெரில்லாத்தலைவன் என்ற புகழாரம் தலைவர் பிரபாகரனுக்கு கிடைத்தது.

அத்துடன், புலிகள் இயக்கமும் – தமிழர் போராட்டமும் உலகப்புகழ் அடைந்தன.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினால் புலிகளின்கதை முடியும் என்ற இந்திய இராணுவத்தலைமையின் எதிர்வு கூறலையே, சிங்களத்தளபதிகளும் வெளியிட்டிருந்தனர். முன்னவரைப் போலவே பின்னவரும் எதிர்வு கூறலில் தோற்றிருந்தார். இப்போது, வவுனியா – கிளிநொச்சி பாதையைக் கைப்பற்றினால் புலிகளின் கதை முடியும் என்று புதிய நம்பிக்கையை சிங்களதேசம் வெளியிட்டுள்ளது.

ஜயசிக்குறுய் நடவடிக்கை மிகவும் மந்தகதியில் நடைபெறுகின்றது என்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால், இதை ஜயசிக்குறுயின் நகர்வுத்தந்திரமாகக் கொள்ளக்கூடாது. உண்மையில் ஜயசிக்குறுயின் சமர்த்தந்திரம் வேகமும் - பேராசையும் (Speedy and Ambitious) நிறைந்ததாகவே இருக்கின்றது. வவு - கிளி. பாதையை ஒரு மாதத்திற்குள் கைப்பற்றிவிடலாம் என்பதுதான் படைத்தலைமையின் முன்னைய எதிர்பார்ப்பு. அதாவது, வேகம், ஜயசிக்குறுயின் திட்டமிடலில் முக்கிய அம்சமாக இருந்தது. அதேவேளை, பாதையை அமைத்து - புலிகளை அழித்து - போராட்டத்தை ஒழித்து - வடக்கை தெற்குடன் இணைத்து... என்று பல்வேறு ஆசைகள் ஜயசிக்குறுயின் இலட்சியங்களாக இருக்கின்றன.

வன்னிப்போர்க்களத்தில் நிதானமாகச் சண்டையிட்ட இந்தியப்படையே தோல்வியுற்றுத் திரும்பியது. ஆனால், வேகத்தையும் பேராசையையும் அடிநாதமாகக்கொண்ட ஜயசிக்குறுய் நடவடிக்கையில், சண்டையிடும் சிங்களப்படைகள், காலகதியில், படுதோல்வி காணப்போவது உறுதி.

அடுத்த வருடம் மாசி மாதத்திற்கு முன்னர் புலிகளை அழித்து ,போர் ஓய்வுக்கு வரும என்று ரத்வத்த கூறுகின்றார்: அடுத்தவருட முடிவுக்குள் போர் நின்று, அமைதி வந்துவிடும் என்று சந்திரிகா அம்மையார் நம்புகின்றார். புலிகளை முற்றாக அழிக்க இன்னும் மூன்று – நான்கு வருடங்கள் செல்லும் என்று இராணுவத்தளபதி தளுவத்த தெரிவித்துள்ளார்.

உண்மையில் இவையெல்லாம் இவர்களின் கூற்றுக்களோ அல்லது எதிர்வு கூறல்களோ அல்ல. மாறாக, இவர்களின் ஆழ்மன ஆசைகளே அவையாகும். O

# கூடுவிட்டுக் கூடுபாயும் இராணுவ பூதம்



தமிழருக்கெதிரான போரிற்கென, ஐ. தே. க. அரசாங்கமும் – பொ. ஐ. மு. அரசாங்கமும் இருவேறு போர்முறைத் திட்டங்களை வைத்திருக்கின்றன.

வடக்கைவிட, ஐ. தே. கட்சியினர், கிழக்கிற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தனர். கிழக்கை முதலில் வெற்றிகொண்டு அதை சிங்களவர் பகுதியாகமாற்ற ஆசைப்பட்டனர். குடியேற்றத்திற்கு வாய்ப்பான நிலவளமும் – மற்றும் – தமிழருக்குச்சொந்தமான நீண்டகடல் எல்லையை அபகரிக்கும் கனவும், அவர்களின் ஆசைக்கு அத்திவாரமாக இருந்தன. அத்துடன், கண்டி இராச்சியத்தின் பகுதியாகவே கிழக்கு இருந்தது என்ற, பேரினவாதிகளின் உரிமை கோரலும் - கிழக்கிற்கு – முன்னுரிமை கொடுக்க ஐ. தே. கட்சியினரைத் தூண்டியிருக்கலாம்.

ஐ. தே. கட்சியின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற முதலாம், இரண்டாம் ஈழப் போர்க்காலத்தில் – தமிழ் இனப்படுகொலை – கிழக்கிலேயே தீவிரமான முறையில் நடைபெற்றதையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானதே.

இதேசமயம், கிழக்கைவிட, பொ. ஐ.மு: அரசாங்கத்தின் போர்முறைத்திட்டம், வடக்கிற்கே அதிக முன்னுரிமை கொடுத்தது. தமிழர் போராட்டத்தின் உயிர்நாடி வடக்கில் இருக்கின்றது! என்று அது கருதுகின்றது. எனவே, வடக்கை முழுமையாக ஆக்கிரமித்து, உயிரைப் பிடுங்கி எறிந்து, போராட்டத்தைக்கொல்ல – அது எத்தனிக்கின்றது. இது வெற்றிகரமாக நடந்தால் ஒரு அணிநடைபோல நடந்து, கிழக்கை அடிமைகொள்ளலாம் என்று அது கணித்து வைத்திருக்கின்றது.

மூன்றாம் ஈழப்போர் தொடங்கியதும், அதாவது, பொ. ஐ. முன்னணி அரசின் போர் தொடங்கியதும், கிழக்கில் பல படை முகாம்களை மூடி – அந்தத் துருப்புக்களை வடக்கிற்கு கப்பலேற்றியது. அதையே தொடர்ந்தும் செய்துவருகின்றது.

ஜயசிக்குறுய் நடவடிக்கைக்கு, இன்று, ஏற்பட்டுள்ள ஆட்பற்றாக்குறையை நீக்க, மீண்டும், கிழக்கில் இருந்து துருப்புக்களை எடுக்க, அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மைக்காலங்களில் – சிறிதும், பெரிதுமாக – 44 படைமுகாம்களை – கிழக்கில் மூடியுள்ளது என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. இதனால் சுமார் 2300 ச. கி. மீ. பரப்பளவு நிலப்பகுதி ஆக்கிரமிப்பு அகன்ற பிரதேசமாக மாறியுள்ளது என்றும், இதில் கணிசமான பகுதி நிலம் கடற்கரையோரப் பகுதிகள் என்றும் அந்தச் செய்திகள் சுட்க்டிகாட்டியுள்ளன.

கிழக்கில் இருந்தும்–தெற்கில் இருந்தும் துருப்புக்களை நகர்த்திவிட்டாலும், ஜயசிக்குறுயின் ஆட் தேவைப்பசி தீர்ந்துவிடப் போவதில்லை. இதனால், பல்வேறு றுபாதக விளைவுகளையும், அரசாங்கம் சந்திக்கப் போவது நிச்சயம். பொ. ஐ. மு. அரசாங்கத்தின் போர்முறைத்திட்டம் " மாதனமுத்த" கதைபோலவே முடியப்போகின்றது. O

## செய்தி ஆய்வு

# கொழும்புக் குண்டுகள்

சிங்கள அரசைப் பொறுத்தவகையில் அதனது தலைநகரின் பாதுகாப்பிலேயே வட–கிழக்குப் போரின் தலைவிதி தங்கியிருக்கின்றது. என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஏனெனில், போர்முயற்சிக்கு மதுகெலும்பாக விளங்கும் நிதிவளத்தைத் திரட்டும் அரசவர்த்தகம் கொழும்பை மையமாகக்கொண்டே செயற்படுகின்றது. போருக்குத்தேவையான வழங்கல் மையமும் கொழும்புதான். போரைநடத்துபவர்களின் செயற்படுகளமும் கொழும்புதான் என்கின்றனர்.

எனவே, கொழும்பு போர்க்களமாகினால் சிங்கள அரசின் போர் இயந்திரம் பெரும்பாதிப்பிற்குள்ளாகும். இது வட – கிழக்குப் போர்நிலவரத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும். இவை காரணமாக, கொழும்பில் வெடிக்கும் குண்டுகள், சந்திரிகா - ரத்வத்த அரசாங்கத்தின் இராணுவக் கொள்கைக்கு எதிராக எய்யப்படும் அம்புகளாகவே அரசாங்கம் கருதும் என்கிறனர் அவர்கள்.

வெடித்த குண்டுகள் ஏற்படுத்திய தாக்கங்களைப்போலவே, குண்டுகள் வெடிக்கவும் இருக்கின்றன என்ற செய்திகள் கொடுக்கின்ற உளவியல்பீதிகளும் - அதனால் எழும் விளைவுகளும் கடுமையானவை என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

போரை நடத்துபவர்கள் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் ( சிங்கள மக்கள் ), போர் அனர்த்தங்களை தங்களது கண்களால் பார்த்து – அதன் கொடூரத்தை இதயத்தால் உணர்ந்து – பீதிநிறைந்த அவல வாழ்க்கையை அனுபவிக்கும் போதுதான், போரை நடத்துபவர்கள் தட்டிக் கேட்கப்படும் சூழல் உருவாக்கப்படுகின்றது. போரைத் தங்களது படைகளால் வெல்லமுடியாது என்ற களயதார்த்தத்தையும் அந்த மக்கள் உணர்ந்த பின்னர்தான் மேற்குறித்த வரலாற்றுச் சம்பவங்கள் நடக்கவாய்ப்பேற்படும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வியட்நாம் போரின்போது, அமெரிக்க மண்ணில் இவ்வாறுதான் மாற்றங்கள் நிகழ்ந்தன. போருக்கு ்யதேறிக்கொண்டு சென்றபொழுது போரை வெல்லமுடியுமா? என்ற கேள்வியை அமெரிக்க மக்கள் எழுப்பினர். விரைவில் வெல்லலாம் என்ற பதிலே மக்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், போர் அனர்த்தத்தை அதாவது வியட்நாம் மக்களின் துயரத்தையும் – அமெரிக்க வீரர்களின் அவலத்தையும், அமெரிக்க புகைப்படப் பிடிப்பாளர்கள், கமராக்களுக்குள் அடக்கி, அமெ




ரிக்க மண்ணில் பரப்பியபோது போரை நடத்திய அமெரிக்க நிர்வாகம், அதன் மக்களாலேயே தட்டிக்கேட்கப்பட்டது. போரை வெல்ல முடியாது என்ற யதார்த்தம் ஒருபுறம் - தனது மக்களிடம் இருந்து எழுந்து - பரவிவரும் எதிர்ப்பு மறுபுறமுமாக நெருங்கிவர, அமெரிக்க அரசின் போர் உறுதி ஆட்டங்கண்டது. இறுதியில், போரில் இருந்து வெளியேறியது.

சந்திரிகா – ரத்வத்த தலைமையும், இப்போது, போர் வெற்றி பற்றிய செய்திகளையே சிங்கள மக்களுக்க வழங்கிவருகின்றது. ஆயினும், அது ஒரு மகிழ்ச்சியான கற்பனை என்ற செய்தியை தலைநகரக் குண்டுகள் சிங்கள மக்களுக்குப் புலப்படுத்தலாம், அல்லது, புலப்படுத்த மேலும் சில காலம் எடுக்கலாம் என்று அவர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

இதேவேளை, கொழும்புக்குண்டுகளால் சிறிலங்காவின் அரசபொருளாதாரம் பெரிய பாதிப்பிற்குள்ளாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. O

# ஹொங் - கொங் தீவும் பனாமாக் கால்வாயும்



ஒரு காலத்தில் 'அபின்' போதைப் பொருளைக்கொண்டு மயக்கி – பயமுறுத்திய சீன தேசத்தை, இன்று, எதனாலும் மயக்க முடியவில்லை. எதைக்காட்டியும் பயமுறுத்த முடியவில்லை.

கடலைக் கட்டியாண்டவர்கள், உலகையும் ஆளத்தகுதியுடையவர்கள் என்றிருந்த அன்றைய காலத்தைய வல்லரசுகளான பிரிட்டனும் – போர்த்துக்கலும், தாம் எடுத்த சீனாவின் நிலப் பகுதிகளை திருப்பிக் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

ஹொங் - கொங் தீவு, சீனாவிடம் கையளிக்கப்பட்டுவிட்டது. போர்த்துக்கல் வசமிருக்கும் மெக்கோவ் (Meccao) என்ற தீவு, 1999 டிசம்பரில் சீனாவிடம் கையளிக்கப்படவிருக்கின்றது. எனினும், தாய்வானை, தன்னுடன் மீண்டும் இணைக்கும் நாளையே சீனா மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது.

படைபலத்தை வைத்து பேரம்பேசி சீனாவிடம் இருந்து நிலங்களை அன்றைய வல்லரசுகள் பெற்றன. பெறும் போது வல்லரசுகளாக இருந்த நாடுகள், திரும்பிக் கொடுக்கும்போது சாதாரண நாடுகள் வரிசையில் வந்து விட்டன. கொடுக்கும்போது மிரண்டு – பயந்து வாளாவிருந்த சீனா. கொடுத்ததைப் பெறும்போது வல்லரசாக நிமிர்ந்து நிற்கின்றது. ஒரு நூற்றாண்டில் நடந்த இந்த நிலைமாற்றத்தை சீனமக்கள் பெருமையுடன் கொண்டாடுகின்றனர்.

இதேவேளை. 1999ஆம் ஆண்டு பனாமாக்கால்வாய், பனாமா அரசிடம் கையளிக்கப்பட இருக்கின்றது. 1914இல் வெட்டி முடிக்கப்பட்ட இந்தக் கால்வாய் 81கி. மீ. ( 51 மைல் ) நீளமானது. கால்வாயின் பராமரிப்பும் – கட்டுப்பாடும் அன்றிலிருந்து அமெரிக்கா விடமே உள்ளது. பசுபிக்சமுத்திரத்தையும், அத்திலாந்திக் சமுத்திரத்தை யும் இந்த ஒடுங்கிய கால்வாய் இணைத்துவிட்டு – கடற்பயணத்தை பல நூற்றுக்கணக்கான மைல்களால் குறைத்துவிடுகின்றது.

வல்லாதிக்க ஆன்மா, முதன்முதலில், கடலின் மடியில்தான் குடிகொண்டிருந்தது. சமுத்திரங்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்த, செயற்கைக் கால்வாய்கள் வெட்டப்பட்ட பின்னர், வல்லாதிக்க ஆன்மாவின் நகர்வுத் திறன் அதிகரித்தது – கடலிலும் ஆழ வேரூண்டியது.

எனினும், 2ஆம் உலகப்போரின் போது கமிகாசேக்களின் ( தற்கொலைப்படை ) துணையுடன் – பேள் துறைமுகம் மீது – ஜப்பான் நடாத்திய கடல் வழி வான் தாக்குதலால், கடற்பல ஆதிக்கக்கனவு கலைந்தது. அதன் பின்னரே வான் பலத்தின் மேலாதிக்கம், இராணுவ சக்திகளால் உணரப்பட்டது. அதனைத்தொடர்ந்து நட்சத்திரப் போர் முறைப் போட்டி ஆரம்பித்தது. வல்லாதிக்க ஆன்மா, தனது புதிய குடியிருப்பிற்குத் தாவியது. எனினும் பனிப்போர் முடிந்தவுடன், போட்டியின்மையால் அது பரபரப்பை இழந்தது.

20 ஆம் நூற்றாண்டு முழுவதும் தனது கட்டுப்பாட்டிற்குள் இருந்த கால்வாயை, பனாமாவுக்கு கொடுக்க அமெரிக்கா எடுத்த முடிவுக்கு, பாதுகாப்பு உணர்வு பற்றி உறுதியான நம்பிக்கையே பிரதான காரணம். போட்டி வல்லரசு இல்லாமல் போனதுடன் அமெரிக்கநாட்டை அச்சுறுத்த, அமெரிக்கக் கண்டத்தில் எந்த ஒரு சக்தியும் இல்லை என்ற யதார்த்தமும், கால்வாயைத் 'தாரைவார்க்க' அமெரிக்காவைத் தூண்டியிருக்கும், ''இராணுவ ரீதியாக கால்வாய் முக்கியமானது. ஆனால், அத்தியாவசியமானதல்ல'' என்று அமெரிக்கத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும், கடலும் - வானும் வல்லாதிக்க ஆன்மாவின் தலையும் - உடலும்போல. O

# விடுதலையும் வாழ்வும் ஒன்றே என்றான பின்?

வே. பாலகுமாரன்

இன்று சருவதேச அரங்கில் தமிழ் தேசிய இனச் சிக்கல் சூடு பிடித்துள்ள விவகாரமாக உள்ளது என்பதில் எவருக்கும் ஐயமிருக்க முடியாது. இச் சிக்கலுக்கு எவ்வகையிலான தீர்வு முன்வைக்கப்படவேண்டும்? ஒற்றையாட்சியின் கீழான அதிகார கிள்ளிப்போடலா? இணைப்பாட்சி (சமஷ்டி) வடிவிலானதா? மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியா? பிரிந்து போகும் உரிமையோடான விரிவான சுயாட்சியா? பூரண விடுதலையா? என்பது பற்றி சருவதேச அரசியல் அரங்கினை இயக்குவிப்போருக்கு அதிகளவு கவனம் இல்லையென்பதிலும் எவருக்கும் ஐயமிருக்காது. உலகச் சிக்கல்களுக்கு பல்வேறு அரசியல் அடைமொழிகளோடான தீர்வுகளை பரிந்துரைக்கவோ அல்லது திணிக்கவோ முயலும் உலகிற்கு, எமது சிக்கலில் மட்டும் கவனம் எட்டப் பார்வையாக, இராசதந்திர மொழியிலான சில வார்த்தைப் பிரயோகங்களாக மட்டுப்படுகின்றது. அண்மைக்காலமாக அமெரிக்க சனாதிபதி உட்பட அமெரிக்க தரப்பு கூறி வருபவை இங்கு உதாரணம் காட்டத் தக்சன. "மோதலில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பும் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும். இதற்கு சந்திரிகா அரசு முன்வைத்துள்ள தீர்வுப்பொதி ஒரு ஆரம்ப அடிப்படையாக அமையும் என நம்புகிறோம்."

அப்படியானால், ஏன் புலிகளை அமெரிக்கா பயங்கரவாதிகள் பட்டியலிட வேண்டும்? சிங்கள அரசுக்கு எல்லா வகையிலும் உதவ வேண்டும்? என்கிற கேள்விகள் இங்கே எழும். இது இரட்டை வேடமல்லவா என எம் மக்கள் வினாவெழுப்பக்கூடும். எல்லா அரசுகளுக்கும் ஒரேயொரு நலன்தானுண்டு, அதுதான் சொந்த நலன் பேணுதல். விடுதலைப் போராட்ட அமைப்புக்களுக்கு இப் பட்டங்கள் சூட்டப்படாவிட்டால்தான் எவருக்கும் ஐயம்ஏற்பட வேண்டும். இவ்வாறு முன்னர் பயங்கரவாதிகள் பட்டம் பெற்றோர், இந்நாள் அமெரிக்க வெள்ளை மாளிகையில் விசேட விருந்தினராகும் தகுதி பெற்றோராகி விடுகின்றனர் என்பதுவும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய சங்கதிதான். இவையெல்லாம் ஒரு வகையிலான இராசதந்திர அழுத்தங்களேயாகின்றன. நவீன அரசியல் உலகின் சித்து விளையாட்டுக்கள் இவை.

உலகின் இத்தகைய நழுவல், மழுப்பல் போக்கிற்கு சான்றாக, அண்மையில் பி.பி.சி. சருவதேச ஒலிபரப்பில் 'கடின உரையாடல்' (Hard talk) என்ற நிகழ்ச்சிக்காக ரிம் செபஸ்தியான் என்கிற அனுபவமிக்க செய்தியாளர் சந்திரிகா அம்மையாரைக் கண்ட செவ்வி அமைகின்றது. "தமது உரிமைகளை வாயினால் கேட்ட தமிழ் மக்கள், 83 கரும் யூலையின் பின்னர் ஆயுதங்களால் கேட்கத் தொடங்கினர். அதில் நியாமுண்டு. ஆனால், நான் பதவியேற்றபின் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வொன்றை வைத்துள்ளேன். எனவே, இனிமேல் ஆயுதப் போராட்டம் அருத்தமற்றது. தமிழ் மக்கள் எனக்கு தெரியப்படுத்தியிருக்கின்றார்கள்; அவர்கள் எனது தீர்வை ஆதரிக்கின்றார்கள்; அமைதியாக வாழ விரும்புகின்றார்கள்; புலிகள் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. தமிழ் மக்களிடையே புலிகள் ஒரு சிறுபான்மைக் குழு" என்றார் அம்மையார். எல்லாவிதமான, வழமையல்லாத வினாக்களை கேட்கத் தயங்காத செபஸ்தியன், தமிழ் மக்கள் எவ்வாறு தமது உள்ளக்கிடக்கையை உங்களுக்கு தெரியப்படுத்தினர்? என்கிற கேள்வியை வலியுறுத்திக் கேட்கவில்லை. கேட்டிருந்தால் செவ்வியின் போக்கே மாறியிருக்கக் கூடும்.

இப்போது செபஸ்தியான் மட்டுமல்ல, இந்த உலகமே கேட்காத, கேட்கத் தயங்கிய கேள்விகளுக்கெல்லாம் விடை, உலக அரங்கிலே விரைவில் நலிக்கப் போகின்றது அமெரிக்காவின் வாசிங்டனிலுள்ள அமெரிக்க மேன் முறையீட்டு (United states court of appeal) நீதிமன்றே இதற்குத் தளமாகப் போகின்றது. இன்றைய அமெரிக்கா எவ்வாறிருந்தாலும் – அன்று – ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிராகபோராடி, பெரும் போர் நடத்தி, குடியேற்ற வாதத்தால் சீரழிந்த நாடுகளுக்கு விடிவெள்ளியானது அந்த நாடு. பின்னர், அமெரிக்கரின் மூன்றாவது சனாதிபதியாகிய தோமஸ் ஜெபர்சன், தன் கையால் எழுதி, 1776 யூலை 4ஆம் திகதி வெளியிடப்பட்ட விடுதலைப் பிரகடனம் என்ன கூறியிருந்தது? "எல்லா மனிதர்களும் பிறக்கும் போது சமமானவர்கள். பிரிக்க முடியாத உரிமைகளை கடவுள் அவர்களுக்கு அளித்திருக்கின்றார். வாழ்வதற்கான உரிமை, சுதந்திரத்திற்கான உரிமை, வளமுடன் வாழ உரிமை என்பன இவற்றுள் சில. இவ்வுரிமைகளைப் பெறவும் அவற்றைக் காப்பாற்றவுமே அரசுகள் அமைக்கப்படுகின்றன. ஆளப்படுவோரின் ஒப்புதலின் பேரிலேயே அரசுகள் அதிகாரம் பெறுகின்றன. எந்தவொரு அரசும் இந்த இலட்சியங்களை அழிக்க முற்பட்டால், அந்த அரசுகளை மாற்றி அல்லது அழித்து புதிய அரசொன்றை நிறுவ மக்களுக்கு முழு உரிமையுண்டு"

இந்த வாசகங்களின் அடிப்படையிலே தான், புலிகளை பயங்கரவாத அமைப்பாக்கியமைக்கு எதிராக, மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுவிலே என்ன கூறப்பட்டிருக்கின்றது? "தன்னாட்சியுரிமை அடிப்படையில் தனியான தாயகமொன்றை அமைப்பதற்கான ஆணையை, தமிழ் மக்கள், 1977 ஆம் ஆண்டே வழங்கி விட்டார்கள். அதன் அடிப்படையில் தமிழ் மக்களின் தன்னாட்சியுரிமைக்கான விடுதலைப் போராட்டத்தை புலிகள் மேற்கொண்டுவருகின்றார்கள். மக்களின் ஆதரவும், தாங்குசக்தியும் இல்லாமல் ஆயுதப் போராட்டத்தைவரித்துக்கொண்ட எந்தவொரு கரந்துறைப் போராட்ட இயக்கமும் நிலைத்து நிற்க முடியாது என்பதற்கு வரலாறே சான்று. விடுதலைப் புலிகள் நிலையான தேசிய இராணுவமொன்றைக் கொண்டவர்கள்; அவர்களிடம் கடற்படைப் பிரிவுமுண்டு. அவர்களது தேசிய விடுதலைப் படையணியில் பல்லாயிரம் விடுதலைப் போராளிகளுமுண்டு; தகுதியானதும் தக்க பொறுப்பும் கொண்ட இராணுவக்கட்டளைக் கட்டமைப்புமுண்டு; இராணுவ பயிற்சி வசதிகளுண்டு; நவீன ஆயுத முறைமைகள் அவர்கள் புழக்கத்திலிருக்கின்றன, பெருமளவு பிரதேசம் அவர்களது நிருவாகக் கட்டுப்பாட்டிலுண்டு; சிறிலங்கா இராணுவத்தோடு மரபுவழிப் போர் முறையிலே எதிர்த்துப் போரிடுவதற்கு தக்கதான செயலுடைத் திறனும் வளங்களுமுண்டு"

எனவே தமிழ் மக்கள் தமது உள்ளக்கிடக்கையை எப்போது, எவ்வாறு தெரியப்படுத்தினார்கள்? வரலாறு என்பது வசதிக்காக மறப்பதற்காக அல்லவே. 1977, 1985 இவ்வாண்டுகள் உலகிற்கு ஓங்கி ஒலிக்கும் அறை கூவலென்ன? "தமிழ்த்தேசம் தனது சுயநிருணய உரிமை அடிப்படையில் தனது தாயகத்தில் தனது இறைமையை நிலைநாட்ட இப்போது முடிவு எடுக்க வேண்டும். இதனை சிங்கள அரசிற்கும் உலகிற்கும் தெரிவிக்க ஒரேயொரு வழி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை ஆதரித்து நீங்கள் வாக்களிப்பதே" என தமக்கு கூறப்பட்டதை ஏற்று, தமிழ்மக்கள், 1977யூலை பொதுத் தேர்தல் முடிவுகள் மூலம் "தாம் அளித்த ஒவ்வொரு வாக்கும் சிங்கள ஆட்சியிலிருந்து தமிழ்தேசம் விடுதலை பெறுவதற்கான ஆணை" என்பதை மிகத்தெளிவாக சருவதேச சட்ட முறைமைகளின் அடிப்படையில் பிரகடனப் படுத்தி விட்டனர். அம்மையார் இப்போது கதையை மாற்றுவதன் மருமம் எவருக்கும் புரியும். ஆனால் "நீங்கள் அளிக்கும் வாக்குகளால் நாம் இலங்கையின் தேசிய அவையின் உறுப்பினராகும் அதேவேளை தமிழீழத்தின் தேசிய அவை உறுப்பினராக நாம் மாறுவோம். இந்த அவை தமிழர்தேசத்திற்கான புதிய யாப்பை வரையும். இந்த யாப்பை செயற்படுத்தி, அமைதியானவழி முறைகளைக் கையாண்டோ அல்லது நேரடி நடவடிக்கைகள் அல்லது போராட்டம் மூலமோ தமிழீழத்தின் விடுதலை அடையப்படும்" என உறுதி கூறிய எம் முன்னாள் தலைவர்கள் இன்று என்ன செய்கின்றார்கள்? வரலாற்றிலே மிகச் சரியானவற்றை மிகப் பிழையானவர்கள் தொடக்கிவைத்தமைக்கு சான்றுகள் தாராளமாகவே உண்டு. வரலாறானது, தொடக்கிவைத்தவர் பொருத்தமற்றவர் என்பதால் தொடக்கி வைக்கப்பட்ட அரும்பணியை புறம் தள்ளுவதில்லை. அதனை பொருத்தமானவர் கையிலே ஒப்படைத்துவிடும்.

மக்கள் தமது உள்ளக்கிடக்கையை உலகிற்கு அறிய வாய்ப்புக் கொடுக்காமல் அரசியல் சதி வலை பின்னப்படும் வேளையிது. எம் மக்கள் தெளிவுடனும் விழிப்புடனும் செயற்பட வேண்டிய நேரமிது. அன்று, தன்னாட்சியுரிமை தா என வாயால் கேட்டபின், கேட்டுப் பெறுவதல்ல வாழ்வுரிமை அது போராடிப் பெறுவது என்பதை உணர்ந்த பின் ஏது குழப்பம்? விடுதலையும் வாழ்வும் ஒன்றே என்றான பின் விடுதலையிலிருந்து வாழ்வை பிரிக்க முடியுமா? விதைகுழியில் துயிலும் பல்லாயிரம் மாவீரரின் மாண்புணர்த்தும் செய்தி இதுதான் "கண்ணிரண்டும் விற்று எவரும் சித்திரம் வாங்குவதில்லை" அமைதிக்கு விலையாக யாரும் விடுதலையை விற்பதில்லை.

**வரலாற்றிலே மிகச் சரியானவற்றை மிகப் பிழையானவர்கள் தொடக்கிவைத்தமைக்கு சான்றுகள் தாராளமாகவே உண்டு. வரலாறானது. தொடக்கிவைத்தவர் பொருத்தமற்றவர் என்பதால் தொடக்கி வைக்கப்பட்ட அரும்பணியை புறம் தள்ளுவதில்லை. அதனை பொருத்தமானவர் கையிலே ஒப்படைத்துவிடும்.**



## மண்ணின் தாய்மை!

விடுதலைக் குழந்தைக்கு ஏங்கி
தவித்தது மண் மடி.
மண்ணின் ஏக்கம் உணர்ந்து
நெகிழ்ந்தார்கள் மண்ணின் மனிதர்கள்.

குருதியிறைத்துக் குருதியிறைத்து
உயிரணுக்களானார்கள் மண்ணின் மனிதர்கள்.
மண்ணின் மடி கனக்க
அதன் கருப்பையில்
உயிரணுக்கள் பள்ளிகொண்டன.
விடுதலைச் சிசுவை சிருஷ்டிக்கும் உயிரணுக்கள்!

உயிரணுக்களை ஏந்தி ஏந்தி
விடுதலையைக் கருத்தரித்தது மண்.
சினையுற்ற விடுதலைக்கு உரமூட்ட
விடுதலையின் கருவறைக்கு
ஓயாமல் விரைகின்றன உயிரணுக்கள்.

மண்ணின் வாளிப்பான தேகம்
விடுதலை சூல்கொண்ட பூரிப்பில் சிவக்கிறது.
மண்ணின் கருப்பையில்
விடுதலைச் சிசு அசைகிறது.
தாய்மையில் புளகித்து சிலிர்க்கிறது மண்.

மலர்களின் நறுமணத்தையும்
தீபங்களின் சுடரொளியையும்
ஆலயமணிகளின் நாத ஒலியையும்
காற்றில் செலுத்தி
உயிரணுக்களின் கருணையைப் பாடுகிறார்கள்
மண்ணின் மனிதர்கள்.

எஸ். உமாஜிப்ரான்

# கட்டப்பொம்மன் காலத்தில் மட்டுமல்ல... எட்டப்பர்கள் இன்றும் இருக்கின்றனர்.

தமிழனே!
இன்னும் எத்தனை காலத்துக்கென்றுதான்
கண்ணீர் வடிப்பாயோ?
விழிநீர் உப்புடன் விருந்துண்பவனே!
நரகிற் கிடந்துழலும் விதியை
எவனடா எழுதினான் உன்தலையில்?
விடுதலைக்காக நீ விழிதிறக்கும் போதெல்லாம்
கூடப்பிறப்பொன்றே உனக்குக் குழிபறிக்கும்.
நீ படைவைத்து அரசாண்ட காலத்தில்
இன்று சந்திரனுக்குச் சென்று
சாதனை படைத்தானே
அவன் ஆடுகள் மேய்த்துக் கொண்டிருந்தான்.
செவ்விந்தியனைக் கொன்று சிம்மாசனம் பிடித்தவன்
இன்று ''சர்வதேசப் பொலிஸ்காரன்'' ஆகிவிட்டான்.
கோட்டைகட்டியாண்ட குலத்துக்குரிய நீமட்டும்
மாட்டைப் பூட்டியே இன்றும் மண்ணைக் கிளறுகின்றாய்.
நீ கப்பலிலேறிக் 'கடாரம்' வென்றபோது
ஜப்பான்காரன் ''எக்ஸ்போ'' நடத்தவில்லை.
தடிக்குச்சிகளால் தட்டிகட்டித்தான் வாழ்ந்தான்.
என்னசெய்வது?
எல்லோர் தலையிலும் பிரம்மன் கையால் எழுதினான்.
உன்தலையில் மட்டும்
அழிக்கமுடியாதபடி ஆணியால் எழுதிவிட்டான்.
இடைக்கிடைதான் நீ எழுவது வழக்கம்
அப்போது கூட அடித்து விழுத்தப்படுவாய்.
அதுவும் அன்னியராலல்ல...
உன்னவரால்.
நீ நிமிர்ந்து கொள்ளும் ஒவ்வொரு நேரத்திலும்
நெஞ்சுக்குப் பாய்கிறதே நெருப்புக்குண்டு.
குண்டெறிபவன் வேறுயாருமில்லை
கூடப்பிறந்தவனென்பதைக் குறித்துக் கொள்.
கராம்பும், கறுவாவும் வாங்கத்தான்
பீரங்கியோடு புறப்பட்டுவந்தான் வெள்ளைக்காரன்.
வந்தவனுக்கு உந்தன் வரலாறு தெரிந்ததும்
வல்லமையைக் காட்டி வரி கேட்டான்.
பாஞ்சாலங்குறிச்சியில் மட்டும்
ஒருவன் பணிய மறுத்தான்.
வெள்ளைக்காரனால் அவனை விழுத்த முடியவில்லை.
பக்கத்திருந்த பாளையக்காரன்
அவனும் தமிழன்,
அதுவும் உருததுடைய உறவுக்காரன்
காட்டிக்கொடுத்துக் கழுத்தை முறித்தான்.
வன்னியிலும் இதே வரலாறுதான்.
வெள்ளைக் கொக்குகளுக் கெதிராக
கறுப்புக் காகமொன்று கச்சைகட்டியது.
துரத்தித் துரத்தி கொக்குகளைக் கொத்தியது காகம்.
வன்னியனை வளைத்துப்பிடிக்க முடியவில்லை.
காட்டிக் கொடுத்தது இன்னொரு காக்கை.
அவனும் தமிழன்
அதுவும் உருத்துடைய உறவுக்காரன்.
அத்துடன் முடிந்ததா அந்தவரலாறு?
இல்லையே... இன்றும் தொடர்கிறது.
எல்லோரின் தோள்களிலும்
இன்று சூரியன் சுடர்கிறது.
உன்தலையில் மட்டும் இன்னும் இருட்டுத்தான்.
என்ன விதியடா உனக்கு?
நீண்டகாலமாக நெடுமூச்செறிந்தபடி
தட்டியெழுப்ப யாருமின்றிக் கட்டிலிற்கிடந்தாய்.
விடுதலைச் சிறகுதந்து உன்னைப் பறக்கவைக்கும்
தேவகுமாரனொருவனைத் தேடிச் சலித்தாய்.
காலம் உன்னைக் காத்திருக்க விடவில்லை.
கையிற்தந்தது ஒரு கைவிளக்கு.
பிரபாகரன் என்ற பெயரைச் சுமந்து
வந்தது அந்த வல்லமை.
தூசிகளை எரித்தபடி தோன்றியது
அந்தச் சுதந்திர நெருப்பு.
அப்போதும் உன்தலையெழுத்து மாறவேயில்லை.
அப்படியேதான் கிடந்தது அது.
காலம் மாறியது,
களங்கள் மாறியது,
பெயர்கள் மாறியது,
வரலாறு மட்டும் மாறவேயில்லை.
எட்டப்பன், துரையப்பா என்றானான்,
காக்கை வன்னியன் கதிர்காமர் என்றானான்.
கூடப்பிறந்ததுகளே குழிபறிக்கும் தலையெழுத்தை
எவர்தான் உனக்கு இல்லாமற் செய்வரோ?
பக்கத்து வீட்டுக்காரன் படலைதிறந்து வந்து
''பூமாலை''யென்று பொரியரிசி போட்டபோதும்
பிரபாகரன் தன்னந்தனியனாய்ப் போராடினான்.
இரவற்தாய்நாட்டின் இராப்பிச்சைக்காக
'வரதராசப்பெருமாள்' வாலை ஆட்டியது.
தின்று முடித்ததும்
சொந்தவீட்டிலேயே ஒண்டுக்கிருந்து விட்டு
அது ஒரிஸாவுக்கு ஓடியது.
இன்று நடிகன் மனைவியின் நாடகம் நடக்கிறது.
ஒப்பனையில் மயங்கி எத்தனைபேர் கிடக்கின்றனர்.
பிரபாகரன் ஒருவன்தான்
அரிதார முகத்தை அறிந்து கொண்டு
காட்டு மரங்களிடையே களங்களை விரித்து
பூட்டுடைக்கப் போராடுகின்றான்.
உயிர்விலை கொடுத்தபடி உண்மையும்
சத்தியத்தைச் சலுகைவிலையில் விற்றபடி பொய்மையும்
சந்தித்துக் கொள்கின்றன.
புதிய கண்ணோட்டப் பிரேம நிலவுகளும்,
வீரசிங்கத்துக்கு வெண்சாமரம் வீசும்
ஆனந்தத்தையே சங்கரிப்பவர்களும்,
தேவ ஆனந்தத்துக்குத் தேதி குறிப்பவர்களும்,
கொள்ளைக்காரிக்குக் குடை பிடித்தபடி
கள்ளத்தனம் செய்யும் கதிர்காம முருகர்களும்
எல்லோரும் அம்மணமாக ஆடுகின்றனர்.
ஆடிவிட்டுப் போகட்டும்.
இது தலையெழுத்தென்று இருந்துவிடலாம்.
அறிக்கைகளுமல்லவா அச்சிடுகின்றனர்.
ஈழத்தமிழர்களை ஈடேற்ற வந்தவர்போல...
இடைக்கிடை உற்சவமூர்த்திகளைப்போல...
ஊர்கோலம் வேறு.
இன்னொருவன் இருக்கின்றான்.
இவனே பெரிய எட்டப்பன்.
நஞ்சின் நிறம் இவனின் நாமம்.
பிடாரிக்குத் தலைவாரி விடுபவன்:
தமிழனே!
இன்னும் எத்தனை காலத்துக்கென்றுதான்
கண்ணீர் வடிப்பாயோ?
விழிநீர் உப்புடன் விருந்துண்பவனே!
நரகிற்கிடந்துழலும் விதியை
எவனடா எழுதினான் உன்தலையில்?



**சமீபத்தில் வெளியிடப்பட்ட, கரும்புலிகளின் உண்மைச் சம்பவத்தைக் கதையாகக்கொண்ட 'தேசத்தின் புயல்கள்' வீடியோ திரைப்படத்தினதும், கரும்புலிகளின் உணர்வுகளுக்கு பாடல்களால் உரையெழுதும் 'தேசத்தின் புயல்கள்' பாடல் ஒலிப்பதிவு நாடாவினதும் மதிப்பீடுகள்.**

# 'தேசத்தின் புயல்கள்'

# வீடியோ திரைப்படம்

பலாலி - முப்படைகளின் கூட்டுத்தளம். 30 சதுரமைல் விஸ்தீரணத்தில் அகன்று நீண்டு, பரந்து கிடக்கும் ஒரு பேரினவாதச் சிங்கம்.

சிறிலங்கா அரச படைகளின் வட புலப் போரரங்கை கட்டுப்படுத்தும் மூளையாகச் செயற்படுகிறது அந்தப் பெருந் தளம்.

அந்தப் பெருந்தளத்தின் மையத்தில் அதன் இதயமாக இயங்கும் சிறிலங்கா விமானப்படையின் முக்கியத்துவம் வாய்ந்த தலைமையகம் அமைந்திருக்கிறது.

அதன் அருகிலுள்ள ஓடு பாதையில் தரித்து நிற்கும் விமானங்களை, தகர்த்தழிக்கும் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள திட்டமிடப்படுகிறது.

தாக்குதல் இலக்கை வேவு பார்த்து, தாக்குதலணி நகரப் பாதை அமைத்து, வேவுப்புலிகளால் தாக்குதலுக்கான நாளும் குறிக்கப்படுகிறது.

அது ஒரு கரும்புலி நடவடிக்கை.

தாக்குதலுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்தக் கரும்புலி நடவடிக்கைக்கு ஏழு கரும்புலிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

தாக்குதலுக்கான இறுதி ஒத்திகையை முடித்துக் கொண்ட கரும்புலிகள், தலைவர் பிரபாகரன் வழியனுப்பி வைக்க, வேவுப்புலிகள் வழிகாட்டிச் செல்ல, அவர்களின் இலக்கை நோக்கி நகர்கின்றனர்.

எதிரியின் காவலரண்களை ஊடுருவி, தங்களின் இலக்கைத் தேடி அந்த உயிராயுதங்கள் நகர்ந்து கொண்டிருக்கும் போது, எதிரியின் கண்களில் பட்டுவிடுகின்றனர். காணக்கூடாத இடத்தில் எதிரி கண்டுவிட நடக்கக்கூடாத அந்தச் சண்டை நடக்கிறது:

அந்தக் கரும்புலிகள் அணி சிதறுகிறது.

ஏழு பேருக்கென வகுக்கப்பட்ட தாக்குதல் திட்டத்தைச் செயற்படுத்த நாலுபேரே மிஞ்சுகின்றனர்.

தாக்குதல் இலக்கு உசாரடைந்து விடுகிறது. தாக்குதலை நிகழ்த்தாமல் தப்பி வெளியேறுவதும் சாத்தியப்படாது. பிரதான கட்டளையகத்தின் ஒப்புதலுடன் இலக்கை நோக்கி கரும்புலி வீரர்கள் நகர்கின்றனர்.

வான்தளத்தின் முட்கம்பி வேலிகளை அறுத்து, நான்கு கரும்புலிகளையும் உள்ளே அனுப்பிவிட்டு, வழிகாட்டிச் சென்ற இரண்டு வேவுப்புலிகளும் திரும்புகின்றனர்.

வான்தளத்தின் உள்ளே நுழைந்த கரும்புலிகள் இலக்குகளைத் தேடி அசைகின்றனர்.

ஓடு பாதையில் தரித்து நின்ற ஒரு உலங்கு வானூர்தி மீது (பெல் – 213) ஒரு கரும்புலியின் கையிலிருந்த 'லோ' முழங்க, பலாலித்தளத்தின் இதயத்தில் யுத்தம் வெடிக்கிறது.

உலங்கு வானூர்தியின் பாதுகாப்புக்கென நிறுத்தப்பட்டிருந்த பவள் கவசவண்டி மீது இன்னொரு 'லோ' அதிர்கிறது.

இரண்டும் பற்றி எரிகின்றன.

அந்த முப்படைகளின் கூட்டுத்தளத்தின் இதயம் அதிர – மூளை கலங்க - நான்கு கரும்புலிகளும் யுத்த சந்நதம் ஆடுகிறார்கள்.

சிறிலங்கா அரசபடைகளின் வட புலப் போரரங்கை கட்டுப்படுத்தும், கட்டளை மையத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளையெல்லாம் தாண்டிச் சென்று, அதன் மூளைக்குச் சலவை செய்த கரும்புலிகளின் வினைத்திறன் மிக்க மனவுறுதியையும், விடுதலைப் புலிகளின் போரியல் பரிமாணத்தையும் விழிகள் விரித்து வியந்தது உலகம்.

மயிர்க்கூச்செறியும் அந்த உண்மைச் சம்பவம் 'தேசத்தின் புயல்கள்' என்ற பெயரில் வீடியோ திரைப்படமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் நடைபெற்ற இப்படியான மயிர்க்கூச்செறியும் உண்மைச் சம்பவங்கள், பிற்காலத்தில் உலகின் புகழ் பெற்ற படநிறுவனங்களால் திரைப்படமாக்கப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றன.

அதியுயர் தொழில்நுட்ப உதவியுடனும், நிறைவான துறைசார் ஊடக வசதியுடனும் தயாரிக்கப்பட்ட அந்தப் படங்கள் வெற்றி பெற்றன. ஆனால், ஒற்றைக் கமராவின் உதவியுடன், துறைசார் ஊடக பற்றாக்குறைகளுக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட 'தேசத்தின் புயல்கள்' வீடியோ திரைப்படம், ஆங்கிலப்படங்களுக்கு நிகரான பிரமிப்பையூட்டுவது, எங்களைப் பெருமைகொள்ள வைக்கிறது.

'தேசத்தின் புயல்கள்' வீடியோ திரைப்படத்தின் நெறியாள்கை தேர்ந்தி, பொ. தாசனின் கைவண்ணத்தைப் பிரதிபலிக்கிறது முரளியின் இசை, காட்சிகளோடு இழைந்து காட்சிகளுக்கு நிஜத்தன்மையைக்கொடுக்கின்றது. இம்ரான் – பாண்டியன் படையணியும் நிதர்சனமும் இணைந்து தயாரித்து – வெளியிட்டுள்ள இந்த வீடியோ திரைப்படத்தில், இம்ரான் - பாண்டியன் படையணியின் போராளிகள், கரும்புலிகளின் பாத்திரங்களுக்கு உயிர்கொடுத்து நடித்திருக்கின்றார்கள்.

'தேசத்தின் புயல்கள்' வீடியோ திரைப்படம், தமிழீழ திரைப்பட வரலாற்றில் ஒரு பாய்ச்சல். O



''வானம் விடியும் நேரம் வரையும் சேவற்கோழி கூவும் - எங்கள் வாசல் விடியும் நேரம் வரையும் தேசப் புயல்கள் வீசும்''

# 'தேசத்தின் புயல்கள்'

# பாடல் ஒலிப்பதிவு நாடா

சூரிய அக்கினி புலிவந்து மீண்டதென பிழம்பாகிப் போகும் கரும்புலிகள்.

தேசத்தின் விடிவுக்காய் தேகத்தைப் பொடியாக்கும் தேசத்தின் புயல்கள்.

வெற்றுச் சொற்களுக்குள் அடங்காத கரும்புலிகளின் தியாகத்தையும், பகை சிலிர்க்கும் அவர்களின் வீரத்தையும், பூவினும் மெல்லிய அவர்களின் உணர்வுகளையும் பாடல்களாக்கி, 'தேசத்தின் புயல்கள்' என்ற பெயரில் பாடல் ஒலிப்பதிவு நாடா ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

'தேசத்தின் புயல்கள்' பாடல் ஒலிப்பதிவு நாடாவை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் தயாரிக்க, இம்ரான் – பாண்டியன் படையணி வெளியிட்டுள்ளது. பல இசைக் கலைஞர்கள் ஒன்று திரண்டு தயாரித்த, ஒரு கூட்டு இசைக் கலவையாக இந்த ஒலி நாடா விளங்குவது ஒரு முக்கிய அம்சமாகும்.

'தேசத்தின் புயல்கள்' என்ற இந்த பாடல் ஒலிப்பதிவு நாடா, ஒவ்வொரு கரும்புலி வெடிக்கும் போதும், இந்த தேசம் விடிவை நோக்கி ஒவ்வொரு அடியாக முன் வைக்கிறது என்பதை அடிநாதமாகக் கொண்டுள்ளது.

வண்ண வண்ணக் கனவுகள் ஊறும் வயதின் ஊற்றுக் கண்ணை அடைத்துவிட்டு, தமிழீழம் என்ற தலைவனின் ஒற்றைக் கனவை நெஞ்சிலும், வெடி மருந்தை நாடி, நாளங்களிலும் நிரப்பிச் சென்று, வெடித்துச் சிதறும் இந்த விந்தை மனிதர்கள், தாய்நிலத்தின் மீது கொண்ட தாளாத காதலை, தம் இனத்தின் மீது கொண்ட பாசத்தை, வரித்துக் கொண்ட இலட்சியத்தின் மீது கொண்ட உறுதியை மெய்சிலிர்க்கும் இந்தப் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.

மனித உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வண்ணக் குறியீடுகளால் வரைந்துணர்த்த முடியாத கரும்புலிகளின் உணர்வெழுச்சிகளை, 'காற்றின் தீராத பக்கங்களில்' தேசத்தின் புயல்கள் என்ற இந்த ஒலித்தாரிகை வரைந்து செல்கின்றது.

இந்தப் பாடல்கள், தேசத்தின் மீதான பற்றுணர்வை, ஆக்கிரமிப்பிற்கெதிரான விடுதலையுணர்வை ஊட்டுகின்றன. போரால் இழந்தவற்றை, போரால் ஈடுசெய்யவும், – பறிகொடுத்தவற்றை பறித்தெடுக்கவும் முனைப்பூட்டுகின்றன. உணர்வெழுச்சி கொள்ளவைக்கும் கலை வடிவமாக ஒலிக்கின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வீறுகொள்ள வைக்கும் கலை இலக்கியப் படைப்புகளில், ஒலிப்பதிவு இசை நாடாக்களாக வெளிவரும் தாயக விடுதலைப் பாடல்களுக்கு கணிசமான பங்குண்டு மனிதனுடைய உணர்வுகளைத் தூண்டுவது இசைக்குரிய சிறப்பு லட்சணம். இந்த இசைப் பாடல்கள், நாம் வாழும் காலத்தை சரித்திரம் படைக்கும் எம் இனத்தின வீரத்தை, எதிரி எமக்கு இழைக்கின்ற அவலத்தை, விடுதலையை வென்றெடுக்க நாங்கள் செய்கின்ற அளப்பரிய தியாகத்தை– அனைத்தையும் கொண்டிருப்பதால் எல்லோரது இதயத்திலும் இடம் பிடித்து, அவர்களின் உணர்வுகளோடு ஒன்றி விடுகின்றன. காலநகர்வில், பாடல்கள் ஏற்படுத்துகின்ற மனவெழுச்சிகளால் அவர்களின் சிந்தையில விடுதலைத் தீ பற்றிக் கொள்கிறது.


உணர்ச்சி மீகு கவிதை வரிகளும், இசையும் இழைந்து உருவாகும் இசைப் பாடல்களுக்கு எல்லாரையும் வசீகரிக்கும் சிறப்புண்டு. ஒரு காலத்தில் தென்னிந்திய சினிமாப் பாடல்களால் சிறைப்பிடிக்கப்பட்ட எங்களின் உதடுகள், இன்று தாயகத்து விடுதலைப் பாடல்களை உரத்துப் பாடுகின்றன.

ஒலிப்பதிவு இசைநாடா இலக்கியம் என்று வகைப்படுத்தும் அளவுக்கு, எமது விடுதலைப் போராட்டத்தில் இசை நாடாக்களின் பங்கு போற்றுதற்குரியதாக உள்ளது. அந்த வகையில் 'தேசத்தின் புயல்கள்' என்ற இந்த ஒலிப்பதிவு இசை நாடா, அதன் பங்கை செவ்வனே செய்யும் என்பது திண்ணம். O

# தவறான இலக்கும் தப்பான கருத்துக்களும்

பயங்கரவாத இயக்கங்களின் பட்டியல் ஒன்றை கடந்த ஒக்டோபர் 8 ஆம் திகதி அமெரிக்க வெளியுறவுச் செயலர் வெளியிட்டிருந்தார். முப்பது இயக்கங்கள் அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தன. புலிகள் இயக்கமும் அதில் ஒன்றாகும்.

கடந்த 25 வருடகாலமாக தமிழரின் சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி – முன்னெடுத்துச் செல்லும் புலிகள் இயக்கத்தை இவ்விதம் பயங்கரவாத இயக்க வகைக்குள் அடக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் செயல் ஈழத் தமிழரை வேதனைக்குள்ளாக்கியுள்ளது. உரிமை கொடுக்க மறுக்கும் ஒடுக்குமுறையாளர்களை தட்டிக்கொடுத்துப் பாராட்டிவிட்டு, உரிமைகேட்டுப் போராடியவர்களை பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டி, அவதூறு செய்யும் துன்பியல் நாடகத்தை அமெரிக்க அரசாங்கம் அரங்கேற்றியுள்ளது.



எனினும், உலகின் தேசிய இன விடுதலைப் போராட்ட இயக்கங்களின் வரலாற்றைக் கருத்தில் எடுத்துப்பார்த்தால், புலிகளுக்கு எதிராக அமெரிக்க அரசாங்கம் எடுத்துள்ள இந்த அவதூறு நடவடிக்கை புதியதொன்றாகத் தென்படாது.

உலகின் பிரபலமான தேசிய விடுதலை இயக்கங்களான பாலஸ்தீன விடுதலை இயக்கம் மற்றும் ஐரிஸ் குடியரசு இராணுவம் போன்றவையும் இவ்விதம் அமெரிக்க அரசாங்கத்தால் பயங்கரவாதப் பட்டம் சூட்டப்பட்ட விடுதலை இயக்கங்களேயாகும். இம்முறை, அமெரிக்காவின் குறிவைப்பிற்குள் புலிகள் இயக்கமும் சிக்கியுள்ளது.

சந்திரிகா அம்மையார் ஆட்சிபீடமேறிய காலத்திலிருந்து சிங்கள அரசின்




ஒடுக்குமுறைப்பண்பிற்கு மறைப்பு முலாம் பூசும் பணி கச்சிதமாக நடந்து வருகின்றது. ஆட்சியைப் பிடிப்பதற்காக சந்திரிகா அம்மையார் வைத்த சமாதான கோசமும் – ஏனைய சிங்கள ஆட்சியாளர்களைவிட தீவின் இனப்பிரச்சனை பற்றி யதார்த்தமாகப் பேசிய விதமும் - உலக அரங்கில் அம்மையாருக்கு சமாதான தேவதைத் தோற்றத்தை வழங்கின. வன்முறை அரசியலுக்கு தனது தந்தையையும் – கணவனையும் பறிகொடுத்த ஒரு அபலைத்தாய், உள்நாட்டுப் போரில் சிக்கித்தவிக்கும் இலங்கைத்தீவில் சமாதானத்தை ஏற்படுத்தப் போகின்றார் என்ற நம்பிக்கையை, அவை, உலகிற்கு வழங்கின.

ஆனால், சமாதானத்தை ஏற்படுத்துதல் என்ற போர்வையில் தமிழரின் தேசிய இன அபிலாசைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தமிழரின் உரிமைப்போரை நசுக்க திரைமறைவில் வேலைசெய்கின்றார் என்ற உண்மையை சர்வதேச சமூகம் காணத்தவறியது. இந்த உண்மையை புலிகள் இயக்கம் அம்பலப்படுத்த முயன்றபோது, சர்வதேசரீதியாக, புலி எதிர்ப்புப் பிரச்சாரத்தை சந்திரிகா அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்டது.

தனது அரசாங்கத்தை சமாதானத்தின் தூதன் போலவும் – புலிகள் இயக்கத்தை சமாதானத்தின் விரோதி போலவும் சித்தரித்து வருகின்றது.

தனது அரசாங்கம் போரை நிறுத்தி இனப்பிரச்சனையை பேசித்தீர்க்கும் உறுதியுடன் இருக்கின்றது என்றும் - ஆனால் புலிகள் போரைத் தொடரவே விரும்புகின்றார்கள் என்றும் பிரச்சாரம் செய்கின்றது.

தனது அரசாங்கம் தமிழ் – சிங்கள இனப்பிரச்சனைக்கு ஒரு நீதியான தீர்வுத்திட்டத்தை முன்வைத்துவிட்டதுபோலவும் - அதை ஏற்று அமைதிப் பேச்சு மூலம் ஜனநாயக அரசியலுக்கு வராது, புலிகள், தொடர்ந்தும் பிடிவாதமாக போர் அரசியலிலேயே நம்பிக்கை வைத்துள்ளனர் என்றும் பொய்ப்பிரச்சாரங்களில் ஈடுபடுகின்றது.

இந்த விசமப்பிரச்சாரங்களுக்கு அமெரிக்க அரசாங்கமும் பலியாகிவிட்டது என்ற உண்மையையே, புலிகள் இயக்கத்திற்கு எதிரான அதன் நடவடிக்கை புலப்படுத்துகின்றது. தமிழர் தரப்பு நியாயங்களை செவிமடுக்காமல் - 50 வருடங்களைக் கொண்ட தமிழர் போராட்ட வரலாற்றைக் கருத்தில் எடுக்காமல், அமெரிக்க அரசாங்கம், ஒரு தலைப்பட்சமாக முடிவெடுத்து – புலிகள் இயக்கத்தை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளது.

பயங்கரவாத இயக்கப்பட்டியல் வெளியான அன்று, அதைக்குறிப்பிட்டு அமெரிக்க ஜனாதிபதி கிளிங்டன் ஆற்றிய உரையில் ——

“ இன்றைய செய்கை மூலம் ஒரு தெளிவான செய்தி உலகிற்கு வழங்கப்படுகின்றது. அதாவது, மாற்றத்திற்கான வழிமுறை, வன்முறையும் - பயங்கரமுமல்ல; மாறாக, பேச்சுவார்த்தைகள் மற்றும் திறந்தமனதுடன் நடைபெறும் கருத்திணக்கங்களுக் கூடாகவே அது நடைபெற வேண்டும் ” என்று வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் இந்த அணுகுமுறை ஆலோசனையை, தமிழ் இனம் உதறித்தள்ளியிருந்ததா? என்ற கேள்வியை எழுப்பி – விடைகாண வேண்டிய தேவை உள்ளது.

அரைநூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்ட தமிழரின் உரிமைப்போராட்டத்தில், சுமார் 30 வருடங்களை சமாதான வழிமுறைமூலம் உரிமைபெற, அது. செலவிட்டிருந்தது. சிங்கள ஆட்சியாளர்கள் உரிமை தருவதுபோல நடித்து, தமிழர் தரப்புடன் உடன்பாடுகள் செய்தனர். பின்னர், தாமே அவற்றைக் கிழித்தும் எறிந்தனர். இந்த நிலையில் தமது தரப்பு கோரிக்கைகளை வலியுறுத்திக் கூறுவதற்காக, தமிழ்மக்கள், அமைதிவழிப் போராட்டங்களை நடாத்தினர். இவை, சிங்கள ஆட்சியாளர்களை சீற்றங்கொள்ள வைத்தது. விளைவு, அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டது. தமிழர்நிலத்தில் இராணுவ – பொலிஸ் அராஜகம் தலைவிரித்தாடியது.

சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் மொழி வன்முறையாக அமைய, தவிர்க்க முடியாத வகையில், எதிர்வன்முறை பிறப்பெடுத்தது. இத்தகைய புறச்சூழலிலேயே புலிகள் இயக்கம் தோற்றங்கொண்டது. அரசியல் உரிமைகளை பெற்றுக்கொள்ளும் வழிமுறையாக ஆயுதப்போராட்டத்தை அது வரித்துக்கொண்டது. ஆகவே, “பேச்சுவார்த்தைகள் - கருத்திணக்க வழிமுறைகள்” காலாவதியாகிப்

# இனவெறி கக்கும் பிக்குகள்!

## - ஒரு வெளிநாட்டுச் செய்தியாளரின் அனுபவம் -



“மற்போன்” என்ற பெயருடைய ஒரு வெளிநாட்டுச் செய்தியாளர் சிறிலங்காவுக்கு விஜயம் செய்து - இனவெறிபிடித்த பிக்குகளின் அரசியற் செயற்பாடுகளை – வெறித்தனமான கருத்துக்களை “தென்சீன மோணிங் போஸ்ற்” என்ற பத்திரிகையில் (ஒக்டோபர் 8, 97) கட்டுரையாக எழுதியிருந்தார். அதில் இருந்து சில பகுதிகளை இங்கே தருகின்றோம்.

‘மடுலுவேவெ சோபித’ என்ற இந்த இனவெறிப்பிக்கு சிறிநாகவிகாரையின் தலைமைக்குரு. சிறிலங்காவின் பௌத்த மதபீடத்தில் உள்ள தீவிரவாத பிக்குகள் மத்தியில் இவரின் புகழ் மேலோங்கி வருகின்றது. அண்மையில் ஹொங் – கொங், சீனாவிடம் கையளிக்கப்பட்ட நிகழ்ச்சியில் பௌத்த சமூகத்தின் பிரதிநிதியாக சோபித தேரர் கலந்து கொண்டிருந்தார். அந்தளவுக்கு அவரின் அரசியல் செல்வாக்கு உள்ளது.

இனப்பிரச்சனைபற்றி இச் செய்தியாளருடன் தேரர் உரையாற்றினார். “இது தமிழர் பிரச்சனையோ! இனப்பிரச்சனையோ! அல்ல: இது ஒரு பயங்கரவாதப் பிரச்சனை. ஜே வி. பியை எப்படி முன்னைய அரசாங்கம் அழித்ததோ, அதே வழிமுறையைக் கையாண்டு இதையும் ஒழிக்க வேண்டும்.” சில நூற்றுக்கணக்கான ஜே. வி பியினரை அழிக்க 30,000 சிங்களவர்களை பிரேமதாசா அரசாங்கம் கொன்றது. அந்த வழிமுறையை வட, கிழக்கில் அமுல்ப்படுத்தும் படி தேரர் கேட்கின்றார்.

தமிழர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றார்கள், அடக்கப்படுகின்றார்கள் என்ற பொதுவான உண்மையைக்கூட இந்த வெறிபிடித்த பிக்கு– சோபித தேரர் –ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் கூறுகின்றார், “தமிழர்கள்தான் பிரச்சனையைத் தொடக்கினார்கள். அதனால் பாதிக்கப்பட்டவர்கள் சிங்கள பௌத்தர்கள் மட்டுமே. ஏராளமான சிங்களவர்களை - பிக்குகளை, தமிழர்கள் கொன்றார்கள். 23 000 சிங்களவர்களை அகதிகளாக்கினர். ஆனால், தமிழர்களுக்கு நாங்கள் எந்தத்தீங்கும் இழைக்கவில்லை.”

வேறொரு பிக்கு இவ்விதம் செய்தியாளருடன் அரசியல் கதைத்துள்ளார். “சிறிலங்காவை ஒரு பல்லினநாடு – பல மதங்களையுடைய நாடு என்று யாராவது அழைத்தால் எனக்கு கோபம் பொத்துக் கொண்டு வருகின்றது. உண்மையில் சிறிலங்கா ஒரு பௌத்த - சிங்கள நாடு. இது, ஒரு நாடு - ஒரு மக்களாகவே இருந்துவருகின்றது” என்று சந்திரிகா அம்மையாரின் தற்போதய அரசியல் சுலோகத்தை, பிக்கு ஆதரித்துப் பேசியுள்ளார்.

தற்போதய இனப்பிரச்சனைக்கான தீர்வாக, தீவிரவாத பௌத்தபிக்குகள் வைத்திருக்கும் திட்டமானது, “அதிகளவு பிள்ளைகளைப் பெற்று - சிங்கள இனத்தின் ஆதிக்கத்தை அதிகரித்துக் கொள்ளும்படி சிங்களப் பெற்றோருக்குப் போதிப்பதேயாகும்” என்று கட்டுரை ஆசிரியர் எழுதியுள்ளார்.

பௌத்த மதத்தைப் பாதுகாத்து – வளர்ப்பதற்காக கௌதமபுத்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகவே, சிங்களவர், தம்மைக் கருதுகின்றனர். மகாவம்சத்தில் இதற்கென ஒரு கதையும் உண்டு. புத்தர் மரணப்படுக்கையில் கிடக்கும்போது, விஜயன் என்ற ஆரிய இளவரசன், வங்காளவிரிகுடா ஊடாக இலங்கைக்கு பிரயாணம் செய்துகொண்டிருந்தானாம்; அதை மனக் கண்களால் கண்டுணர்ந்த புத்தபிரான் “ஓ கடவுளே, இலங்கையில் எனது மதம் பரவி-செழித்தோங்குமா!” என்று கூறியதாக மகாவம்சம் கூறுகின்றது.

மகாவம்சம் இவ்விதம் சொல்லமுற்படுவது பற்றி. செய்தியாளர், ஒரு சிங்களப் புத்திஜீவியிடம் கருத்துக்கேட்டார் “இது ஒரு முட்டாள்த்தனமானகருத்து இதற்கு வரலாற்றுரீதியாகவோ அகழ்வாராட்சிரீதியாகவோ சாட்சியங்கள் இல்லை.” பேராசிரியர் மகிந்த பலிகவடன என்ற அறிவுஜீவி கூறுகையில் “இலங்கைத்தீவு முழுவதும் ஒருவருடைய ஆட்சியின் கீழ், மிக அரிதாக ஒன்று - இரண்டு தடவைகள் மட்டுமே இருந்துள்ளது. வரலாற்றின் எல்லாக் காலத்திலும் இலங்கைத் தீவானது, இனங்களினதும் - பண்பாடுகளினதும் ஒரு கொதி உலையாக குமுறிக்கொண்டே இருக்கிறது” என்று இலங்கையின் பண்டைய ஆட்சியியல் வரலாற்றை அவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

இந்தப் பேராசிரியர் மேலும் கருத்துக் கூறுகையில் “புத்தபிரானால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக - சிங்களவர் தம்மைக் கருதுவது போலவே. பல்வேறு நாடுகளிலும் வாழும் பௌத்தர்களும், தம்மையே புத்தபிரான், பௌத்தத்தைக்காக்க தேர்ந்தெடுத்தார் என்று ஒரே கதையையே அவர்களும் கூறுகின்றனர்” என்று தகவல் சொன்னார். “இந்தக்கதை ஒரு மத ஐதிகமாக இருந்துவிட்டுப்போவதில் தவறில்லை. ஆனால், அதையே வரலாறாக்கும் போது மக்கள் உணர்ச்சிமயமாகின்றனர் இலங்கைத்தீவின் தற்போதய அரசியல் பிரச்சனைக்கும் அதுதான் காரணம்” என்று இவர் விளக்கினார்.

வெளிநாட்டில் வசிக்கும் ஸ்ரான்லி ஜெயவீர என்றொரு சிங்களப் புத்திஜீவி, பௌத்த சித்தாந்தங்களின் அடிப்படையில், இத்தகைய இனவெறி பிடித்த பிக்குகளை சாடியுள்ளார். “பௌத்தர்கள் என்று இவர்கள் எப்படித் தம்மை அழைக்கமுடியும். சகல அடையாளங்களையும் இழக்கும்படியல்லவா புத்தரின் போதனைகள் கூறுகின்றன. அப்படியிருக்க, சிங்கள – பௌத்தர்கள் என்று எப்படி இவர்கள் தங்களை வகைப்படுத்தி அழைக்கமுடியும் ஏன், மறுபிறப்புப் பற்றி பௌத்தம் கூறுகின்றதே .. அப்படியாயின் இந்த சோபித தேரர் அடுத்தபிறப்பில் ஒரு தமிழனாக அல்லது ஒரு தவளையாகவும் பிறக்கக்கூடுமே” என்று கூறியுள்ளார்.

1983 தமிழினக்கொலையில் 3000 தமிழர்கள் கொல்லப்பட்டனர். கொழும்பில் வாழ்ந்த 60வீத தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். தமிழர்களுக்கு எதிராக பிக்குகளும் வன்செயல்களில் ஈடுபட்டதை வெளிநாட்டுப் பிரசைகள் நேரில் கண்டு – பகிரங்கப்படுத்தியுள்ளனர். வில்லியம் மக்கோவன் என்ற வெளிநாட்டுச் செய்தியாளர் எழுதிய நூல் ஒன்றில் “சகோதரிகளான இரண்டு தமிழ்யுவதிகள், சிங்களக்காடையர்களால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு - சிதைக்கப்பட்ட போது அங்கு நின்ற பிக்குகளின் குழுவொன்று எல்லாத்தமிழர்களையும் கொல்லுங்கள் என்று பைத்தியம் பிடித்தவர்கள் போலக் கத்திக்கொண்டிருந்தனர்” என்று எழுதியிருந்தார்.

இதை ஒரு பிக்கு மறுத்தார் என கட்டுரையாளர் எழுதியுள்ளார். அந்தப்பிக்கு சொன்னாராம்... “தங்களுடைய தலையை மழித்துக் கொண்டு – மஞ்சள் அங்கியை அணிந்தபடி எவரும் பிக்குபோல வேசமிடலாம்” என்று அராஜகத்தில் ஈடுபட்ட பிக்குகளை பாதுகாக்க முயன்றுள்ளார்.

இது தொடர்பாக சோபித தேரரின் கருத்து இனவெறியின் உச்சமாக உள்ளது. “சிங்களவர்கள் ஆத்திர மூட்டப்படுகின்றனர். இராணுவத்தின் மீதான தாக்குதல்களை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது. அதற்கெதிராக சிங்களவர்கள் போராடுவார்கள்” என்று கர்ச்சித்துள்ளார். ○

---

போன நிலையிலேயே தமிழரின் உரிமைப் போராட்டம் ஆயுதவழியை நாடியது. இந்த வரலாற்று உண்மையை அமெரிக்க அரசாங்கம் புரிந்துகொள்ளத் தவறிவிட்டது.

ஆயுதப்போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தாலும் தமிழரின் இனப்பிரச்சனையைப் பேசித்தீர்க்க, புலிகள் தயாராகவே இருந்துவருகின்றனர். ஆனால், தமிழினத்தின் தேசிய அடையாளங்களைச் சிதைத்துவிட முயலும் தீர்வு யோசனைகளுடனும் – ஆயுத எழுச்சியை மழுங்கடித்து தமிழினத்தை அடிமைகொள்ள முயலும் சதித்தனமான திட்டங்களுடனுமே, சிங்கள அரசாங்கங்கள் பேச்சுவார்த்தை மேசைக்கு வருகின்றன. இவ்விதம், தீர்வுப்பொதிகள் என்ற பெயரிலான தமிழ் இனத்தின் அரசியல் தற்கொலைச் சான்றிதழ்களில் புலிகள் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்திட வேணடும் எனறு வெளிநாட்டரசாங்கங்கள் எதிர்பார்ப்பது நீதியான செயல் அல்லவே! சிங்கள ஆட்சியாளர்களின் இத்தகைய நயவஞ்சக நாடகங்களை, புலிகள் இடைநடுவில் கலைக்கும்போது “புலிகள் பேச்சுவார்த்தைக்கு எதிரானவர்கள்” என்று கருத முயல்வது அரசியல் முதிர்ச்சியான செயல அல்ல.

இது ஒருபுறமிருக்க, “அமெரிக்காவின் தேசிய நலனைப் பாதுகாக்கவே புலிகளை சட்டவிரோதமாக்கினோம்” என்று அமெரிக்க அதிகாரிகள் கருத்து வெளியிடுகின்றனர்.

புலிகளின் அரசியல் குறிக்கோளுக்கும் – அமெரிக்காவின் தேசியநலனுக்கும் எந்தவிதத்தொடர்பும் இல்லை. அமெரிக்கச் சட்டங்களை – அமெரிக்க மண்ணில் – புலிகள் மீறியதாக குற்றச்சாட்டுகள் இல்லை. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்கு அல்லது அதன் உள்நாட்டு அரசியல் உறுதிப்பாட்டிற்கு பங்கம் விளைவிக்க, புலிகள் என்றுமே முயன்றதில்லை. மற்றைய நாடுகளின் சட்டங்களை மதிப்பதும், அந்தந்த நாடுகளின் தேசிய நலன்களுக்கு குந்தகம் ஏற்படாமல் நடப்பதும் புலிகள் இயக்கத்தின் முக்கிய கொள்கையாகும். இந்த நிலையில், அமெரிக்காவின் தேசிய நலனைப் பாதுகாக்கவே புலிகளைத் தடைசெய்தோம் என்ற கூற்று அமெரிக்க அரசாங்கத்தின் தவறான புரிதலையே சுட்டிக்காட்டுகின்றது.

இதேவேளை, அமெரிக்காவுக்கு தேசிய நலன்கள் இருப்பதுபோல, எமது மக்களுக்கும் தேசிய இன அபிலாசைகள் உண்டு. அதை அமெரிக்க அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அமெரிக்காவின் தேசிய நலனுக்கு எமது போராட்டம் எந்த வித தீங்கையும் இழைக்கமாட்டாது. அவ்வாறு தீங்கிழைக்கலாம் என்ற அமெரிக்காவின் கவலை அர்த்தமற்றது.

கிளிங்டன் நிர்வாகம் ஆலோசனை கூறவிரும்புவது போல பேச்சுவார்த்தை மூலம் எமது அரசியல் உரிமைகளைப் பெறுவதில் எமக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. இரத்தம் சிந்தாமல் எமது மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற முடியுமாயின் அதற்காக அதிக மகிழ்ச்சியடைவது புலிகள் இயக்கமாகத்தான் இருக்கும். ஆனால், இது சாத்தியமா? என்ற கேள்வியை ஈழத்தமிழரின் அரசியல் வரலாறு எழுப்புகின்றது.

போரைத்தவிர்த்துவிட்டு – சமாதான வழிமுறையில் இனப்பிரச்சனையை பேசத்தீர்க்கவேண்டும் என்று அமெரிக்க அரசாங்கம் உண்மையில் விரும்பியிருந்தால், அதற்காக சிங்கள அரசைத்தான் அது, நிர்ப்பந்தித்திருக்கவேண்டும். புலிகளுக்கு பயங்கரவாதப் பட்டம் சூட்டுவதால் இலங்கைத்தீவில் அமைதி பிறந்துவிடாது. மாறாக, போர்விரிவடையவே அது உதவும். அமெரிக்காவின் இந்தச் செயலை சிங்களத்தின் இராணுவவாதிகள் தமக்குச் சார்பாக எடுத்து - உற்சாகம் பெறுவர். இதனால், போர்மூலமே இனப்பிரச்சனை தீர்க்கப்படவேண்டும் என்ற கருத்து, சிங்களத்தில் பரவும் ஏதுநிலை தோன்றும். இது தமிழினத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் ஒரு அம்சமாகும்.

எனவே, த. வி. புலிகள் இயக்கத்திற்கு மாசுகற்பிக்கும் வகையில் அமெரிக்கா எடுத்த நடவடிக்கையை, அது விலக்கிக் கொள்ள வேண்டும் என்று புலிகள் இயக்கம் கேட்டுக்கொள்கிறது. எமது மக்களின் வேண்டுகோளும் அதுவேயாகும். அவ்விதம் நடவடிக்கை எடுத்துவிட்டு, ஒரு நடுநிலையான நடுவராக இருந்து இருதரப்பின் கருத்துக்களையும் அவதானமாக அவதானித்து இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஆக்கபூர்வமானவகையில தனது பங்களிப்பை வழங்குவதே சிறந்தது.

அமெரிக்க அரசாங்கத்தின் செயலை ஆட்சேபித்து, அமெரிக்க நீதிமன்றில், புலிகள் இயக்கம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. புலிகள் மீது அநீதியான முறையில் அவதூறு சுமத்தப்பட்டுள்ளது என்பதே புலிகளின் நிலைப்பாடு. அமெரிக்க அரசாங்கம் கூறியுள்ளது போல புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பு அல்ல, மாறாக, ஈழத்தமிழரின் அரசியல் சுபீட்சத்திற்காகப் போராடும் விடுதலை இயக்கம் என்று நீதிமன்றில் எடுத்துக்கூறி - நிரூபிக்கவும் புலிகள் இயக்கம் முயற்சிசெய்கின்றது. ○

## தாயகம், தேசியம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ஈழத் தமிழினத்தின் துயர் துடைக்க இதுவரை சாதித்தது என்ன?**



**மாவீரர்களின் நினைவாக ஒரு வீர வழிபாட்டு மரபு எமது மண்ணில் உருவாகியிருக்கிறதென்பதை நான் பெருமிதத்துடன் சொல்வேன்.**

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்பட்டதா?

திப்பற்றி எரியும் தமிழரின் தேசியப் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டதா?

ஒன்றுமே நடக்கவில்லை.

மாறாக, இந்த நீண்ட காலவிரிப்பில், தமிழர்கள் மீது, துன்பத்தின் மேல் துன்பமாக, தாங்கொணாத் துயரப் பளு மட்டுமே சுமத்தப்பட்டு வந்தது.

தமிழரின் நிலத்தை அபகரித்து, தமிழரின்மொழியைப்புறக்கணித்து; தமிழரின் கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகளை மறுத்து, தமிழரின் தேசிய வளங்களை அழித்து, தமிழரின் சமூக,பொருளாதார வாழ்வைச் சிரழித்து, தமிழர்களைப் பெரும் எண்ணிக்கையில் கொன்றொழித்து, தமிழினத்தை இனவாரியாக ஒழித்துக்கட்டுவதில்தான் சிங்கள அரசுகள் முனைப்புடன் செயற்பட்டன. இதுதான் வரலாற்று உண்மை.

சிங்களத்தின் ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் ஆட்சிக்காலம் தான் தமிழினத்திற்கு சாபக்கேடாக அமைந்தது. இந்த மூன்று ஆண்டு காலத்தில் அவலத்திற்கும் இம்சைக்கும் ஆளாகாத தமிழர்களேஇல்லையெனலாம். சந்திரிகாவின் ஆட்சியில் தான் போர் விரிவடைந்து,பெரும் தியாகப் பரவி தமிழர் தேசத்தைச் சுட்டெரித்தது. இதனால் சனசமுத்திரமாக மக்கள் இடம்பெயர்ந்து இருப்பிடமின்றி அவலப்பட்டனர். தமிழரின் வரலாற்றுப் புகழ்மிக்க பாரம்பரிய நிலங்கள் இராணுவ அடக்குமுறையாட்சிக்கு உட்பட்டன. மாறி, மாறி நிகழ்ந்த படையெடுப்புக்களோடு, உணவு, மருந்துத் தடைகளையும் அரசு இறுக்கிவந்ததால், பசியும் பட்டினியும், நோயும் சாவுமாக தமிழ் மக்கள் சந்தித்த இன்னல்களை சொல்லில் விபரிப்பது கடினம்.

ஐம்பது ஆண்டு காலமாக, முடிவின்றி நீண்டுசெல்லும் சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்கு முறையானது சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில்தான் மிகவும் தீவிரமான கடும் போக்கை எடுத்தது எனலாம். தமிழரின் தேசிய சுதந்திர இயக்கமாகிய விடுதலைப் புலிகளை நசுக்கி, தமிழினத்தைச் சிங்கள இராணுவ ஆட்சியின்கீழ் அடிமைப்படுத்துவதுதான் அரசின் அடிப்படையான நோக்கம்: இந்த இராணுவத் தீர்வை நடைமுறைப்படுத்துவதில்தான் முழு முனைப்போடு செயற்பட்டுவருகிறதுசந்திரிகா அரசு

தனது பாரிய இராணுவத் திட்டத்தையும் அதன் விளைவாக தமிழருக்கு ஏற்பட்டுவரும் பேரவலங்களையும் மூடிமறைத்து, உலகத்தின் கவனத்தை திசை திருப்பும் நோக்கில், சந்திரிகா அரசானது தீர்வுப் பொதி என்ற நாடகத்தை அரங்கேற்றியது. இந்த அரசியல் நாடகத்தின் சூட்சுமத்தை உலக நாடுகள் புரிந்துகொள்ளவில்லை. சந்திரிகாவின் தீர்வுப் பொதியானது, இராணுவத் தீர்வுத் திட்டத்தின் மறுமுகம் என்பதை உலகம் கண்டுகொள்ளவில்லை. மாறாக, சிங்கள அரசின் சாணக்கியமான பிரச்சார மாயையில் மயங்கி, உலக நாடுகள் சந்திரிகாவின் தீர்வுப் பொதிக்குக் கண்மூடித்தனமாக ஆதரவு வழங்கின. சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் தமிழ்த் துவேசப் போக்கினால் தமிழர் முகம்கொடுத்த கசப்பான வரலாற்று அனுபவத்தைக் கருத்தில் கொள்ளாது, அவசரப்பட்டு உலக நாடுகள் எடுத்த இம் முடிவு எமக்கு ஒருபுறம் வியப்பையும் மறுபுறம் ஏமாற்றத்தையும் கொடுத்தது. சர்வதேச உலகம் சந்திரிகாவின் சார்பாகத் திரும்பியதால், துன்பம் தோய்ந்த தமிழரின் அவலக்குரல் உலகத்தின் மனச்சாட்சியை உறுத்தவில்லை.

சந்திரிகாவின் தீர்வுப்பொதி, தமிழரின் அடிப்படையான தேசிய அபிலாசைகள் எதையும் தொட்டு நிற்கவில்லை. காலத்திற்கு காலம், தேய்ந்து, தேய்ந்து உள்ளடக்கம் உருக்குலைந்துவரும் இத் தீர்வுத் திட்டம் இரண்டரை வருடங்களாக இழுபட்டும் இன்னும் முழுமை பெறவில்லை. எனினும் இத் திட்டத்தின் நோக்கம் தெளிவாகத் தெரிகிறது. தமிழரின் தேசிய தனித்துவத்தையும், தாயகத்தையும் மறுதலித்து, தமிழர் தேசத்தை சிங்கள இறையாட்சியின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதுதான் இதன் குறிக்கோள். இராணுவத் தீர்வின் நோக்கமும் இதுதான். எனவே, சந்திரிகாவின் அரசியற் பொதியும், இராணுவத் திட்டமும் ஒரே நாணயத்தின் இரு முகங்களாகவே எமக்குத் தெரிகின்றன.

தமிழரின் தேசிய இனப் பிரச்சனையை நீதியான முறையில், சமாதான வழியில் தீர்த்துவைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதியும் சந்திரிகா அரசிடமில்லை. தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஓர் உருப்படியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவும் சந்திரிகாவிடம் துணிவில்லை. இந்த இயலாமையை நியாயப்படுத்த தீவிர பேரினவாத சக்திகள் மீது பழியைச் சுமத்த முனைகிறது அரசு. உண்மையில் சந்திரிகாவின் அரசும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ஒரு நவீன வடிவம்தான். சிங்கள - பௌத்த பேரினவாதத்தைக் கட்டியெழுப்பி, அதனைப் பூதாகரமாக வளர்த்துவிட்ட சந்திரிகாவின் அரசியற் கட்சி, இப்பொழுது அந்தத் தீவிரவாத சக்திகள் மீது குறைகூறுவது அபத்தமானது.

விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதான வழியில் அரசியல் தீர்வை விரும்பவில்லையெனச் சந்திரிகா அரசு கூறுவதிலும் உண்மையில்லை. நாம் சமாதான வழியில் அரசியல் தீர்வை விரும்பியதால்தான் திம்பு தொடக்கம் யாழ்ப்பாணம்வரை பல பேச்சுக்களிற் கலந்துகொண்டோம். இப்பேச்சுக்களின்போது நாம் தமிழினத்தின் நலனில் உறுதியாக நின்றோம். சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க மறுத்தன. இதனாற் பேச்சுக்கள் வெற்றிபெறவில்லை. இதற்கு எம்மீது குறைகூறிப் பயனில்லை. சிங்கள அரசுகளின் விட்டுக் கொடாத போக்கே இந் நிலைமைக்குக் காரணம்.

தமிழரின் தாயகம், தமிழரின் தேசியம், தமிழரின் தன்னாட்சி உரிமை ஆகியவற்றை அங்கீகரித்து, அவற்றின் அடிப்படையில் ஓர் அரசியற் தீர்வுத் திட்டம் வகுக்கப்பட வேண்டுமென நாம் திம்புக் காலத்திலிருந்தே வலியுறுத்தி வருகிறோம். இதுவே இன்றும் எமது நிலைப்பாடாக இருந்து வருகிறது.

எந்தவோர் அரசியல் தீர்வுத் திட்டத்திற்கும் தமிழரின் தாயகம் அடிப்படையானது; தமிழரின் நிலமானது தமிழரின் தேசிய வாழ்விற்கும் தேசிய தனித்துவத்திற்கும் ஆதாரமானது. தமிழர்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் தாயகநிலத்தை அங்கீகரிக்காதஎந்தவொரு திட்டமும் தமிழரின் தேசிய பிரச்சனைக்குத் தீர்வாக அமையாது.

தமிழரின் வரலாற்றுச்சொத்தான தாயக நிலத்தையே ஏற்றுக்கொள்ளத் தயங்கும் இன்றைய சிங்கள அரசியல்வாதிகள் திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு தீர்வுத்திட்டத்தைத் தமிழர்களுக்கு வழங்குவார்களா என்பது கேள்விக்குரியது. தென்னிலங்கை அரசியலுலகத்தில் சிங்கள - பௌத்த பேரினவாதச் சிந்தனை ஆதிக்கம் செலுத்தும்வரை இது சாத்தியமாகப் போவதில்லை. இந்த உண்மையை உணர்ந்துகொண்டதால்தான், இருபது ஆண்டுகளுக்கு முன்னரே தமிழீழ மக்கள் தன்னாட்சி உரிமையைப் பிரகடனம்செய்து தனியரசு அமைக்க முடிவெடுத்தனர். தமிழ் மக்களின் இத் தேசிய அபிலாசையை இலட்சியமாக வரித்தே, கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எமது விடுதலை இயக்கம் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டப் போராடி வருகிறது.

தமிழர்களின் உரிமைகளையும் பறித்து, தமிழர்களுக்கு ஒரு நீதியான தீர்வு வழங்கவும் மறுத்து, தமிழர்கள் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதையும் எதிர்த்து, எல்லாவழிகளிலும் சமாதானப் பாதைக்கு இடையூறாக நிற்பது சிங்களப் பேரினவாதிகளேயன்றி, நாம் அல்ல.

கடந்த ஐம்பது ஆண்டு காலமாக, அடக்குமுறை என்ற ஒரே வழியில் தான் சிங்களம் சென்று கொண்டிருக்கிறது. இந்தக் குருட்டுத்தனமான அணுகுமுறையால் தான் இலங்கையில் அமைதிகுலைந்து போரும் வன்முறையும் தலைதூக்கி நிற்கின்றன. இந்த அணுகுமுறையைச் சிங்கள தேசம் மாற்றிக் கொள்ளாவிடின், முடிவில்லா யுத்தத்தையும் பேரழிவையுமே அது சந்திக்க வேண்டிவரும். இந்த அழிவுப் பாதையைத் தேர்ந்தெடுத்து நிற்பது, சிங்களப் பேரினவாதிகளேயன்றி, நாமல்ல.

இராணுவ அடக்குமுறைக் கொள்கையால் சிங்கள தேசம் தன்னைத் தானே அழித்துக்கொண்டிருக்கிறதே தவிர, தமிழினத்தின் சுதந்திர எழுச்சியை அதனால் அழித்துவிட முடியாது. இந்த உண்மையைச் சிங்களப் பேரினவாதம் என்றோ ஒரு நாள் உணர்ந்தே தீரும். ஆயினும் இராணுவ வன்முறைப் பாதையைக் கைவிட்டு, சிங்களம், தமிழ் மக்களுக்கு நீதி வழங்குமென நாம் எதிர்பார்க்கவில்லை. அந்த எதிர்பார்ப்புடன் நாம் எமது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. தேச விடுதலை என்பது எதிரியால் வழங்கப்படும் சலுகையல்ல. அது, இரத்தம் சிந்தி, உயிர்விலை கொடுத்து போராடிப் பெறவேண்டிய புனித உரிமை.

எனவே, நாம் எமது விடுதலை இலட்சியத்தை அடைய தொடர்ந்து போராடுவோம்.

இத்தனை காலமும் நாம் சிந்திய இரத்தமும், நாம் செய்த உயிர்த்தியாகங்களும் வீண்போகாதென்ற திடமான நம்பிக்கையுடன் நாம் தொடர்ந்து போராடுவோம்.

எமது புனித மண்ணை தமது ஆக்கிரமிப்புப் பாதங்களால் அசிங்கப்படுத்தி நிற்கும் எதிரிப் படைகளை எமது மண்ணில் இருந்து விரட்டியடிப்போமென்ற திடசங்கற்பத்துடன் நாம் தொடர்ந்து போராடுவோம்.

உறுதியுடன் போராடும் தேசமே இறுதியில் வெற்றிபெறுமென்ற உண்மையை நெஞ்சில் நிறுத்தி, நாம் செயலுறுதியுடன் போராடுவோம்.

மனவலிமையின் நெருப்பாக எரிந்து எமது மண்ணின் விடுதலைக்காகக் களமாடி வீழ்ந்த மாவீரர்களை நினைவு கூர்ந்து, இலட்சிய உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் ○

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**